ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும

An Introduction to Sri Ramana's Life and Teachings

David Godman talks to John David

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்

-------------------------

டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு

-------------------------

சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)

# ஸ்ரீ இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறும், அவர் போதனைகளும்


## பாகம்-1

*( ஜான் டேவிட் என்பவரும் , டேவிட் காட்மன் என்பவரும் இரமண மகரிஷியின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை அனைவரும் தெரிந்து கொள்ளும் நிலையில் ஒரு கலந்துரையாடல் நடத்தி உள்ளனர். அதன் மொழி பெயர்ப்பு இது. தமிழில் மொழி பெயர்க்கையில் ஆங்கிலத்தின் வார்த்தைகளை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்த்து எழுதினால் படிக்கும் சுவை மறைந்து விடும் என்பதினால் அவருடைய கருத்தை எந்த விதத்திலும் மாற்றாமல் வார்த்தை ஜாலத்தில் சற்று மாற்றிக் கொடுத்து உள்ளேன். ஏன் என்றால் பகவானுடைய ஆன்மீகக் கருத்துக்களின் ஆழம் எளிதில் எல்லோரும் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. அதை அனுபவித்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.*


*--சாந்திப்பிரியா-- )*

**ஜான் டேவிட் :-** இரமண மகரிஷியின் இளமைக் கால வாழ்க்கை பற்றியும், அவர் பல்வேறு கட்டங்களில் எப்படி வளர்ந்தார் என்பது குறித்து கூற முடியுமா ?


**டேவிட் காட்மன் :-** தமிழ்நாட்டில் உள்ள திருச்சியில் மிகவும் பக்திபூர்வமான நடுத்தர குடும்பத்தில் வாழ்ந்திருந்த சுந்தரம் ஐயர் என்பவருடைய மகனாகப் பிறந்தவர் பகவான். அவருக்கு பெற்றோர் இட்டப் பெயர் வெங்கட்ராமன் என்பது. சுந்தரம் ஐயர் எந்தவிதமான சட்டப் படிப்பும் படிக்கவில்லை என்றாலும் ஒரு



*1902* ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட இரமண மகரிஷியின் புகைப்படம்



ஸ்கந்திராஷ்ரமத்திற்கு செல்லும் வழி



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



வக்கீலாக வெற்றிகரமாக பணி புரிந்தவர். அவருக்கு அவருடைய சமூகத்தில் நல்ல பெயர் இருந்தது.


வெங்கட்ராமன் மற்ற எல்லா இளைஞர்களைப் போலத்தான வளர்ந்து கொண்டு இருந்தார். அதே சமயத்தில் தான் பிற்காலத்தில் பெரும் புகழ் அடைய இருப்பவர் போன்ற குணங்கள் எதையும் வெளிக் காட்டாமல் வளர்ந்து வந்தார். விளையாட்டுக்களில் சிறந்து விளங்கினாலும் படிப்பிலும், ஆன்மீகத்திலும் ஆர்வம் இல்லாமலும் இருந்தார். இளமைப் பருவத்தில் நிறையவே குறும்புத்தனங்கள் செய்தபடியும் இருந்தார். அவரிடம் சில வினோதமான பழக்கங்கள் இருந்தன. தன்னை மறந்து உறங்கும் பொழுது அவரை நண்பர்கள் அடித்து உதைத்தாலும் என்ன என்றே தெரியாத அளவு தன்னை மறந்த உறக்க நிலையில் அவர் இருப்பது உண்டு.

விளையாட்டுக்களில் எந்த குழுவில் அவர் இடம் பெறுகின்றாரோ அந்த குழு நிச்சயமாக ஜெயித்துவிடும் என்ற அதிருஷ்டம் இருந்ததினால் தங்கக் கை(ராசி) என்ற அடைமொழிப் பெயர் அவருக்கு இருந்தது. வெங்கட்ராமனுக்கு இயற்கையிலேயே தமிழில் புலமை இருந்தது. அதனால் அவருடைய ஆசிரியர் தமிழில் தவறாக எதையும் சொல்லித் தந்தால் அதை அவர் திருத்திக் கூற தயங்கியது இல்லை.


அவருடைய பன்னிரண்டாவது வயதில் அவருடைய தந்தை மதுரை நகரில் இறந்து விட்டார். 1896 ஆம் ஆண்டுவாக்கில் வெங்கட்ராமனுக்கு பதினாறு வயதான பொழுது அவருக்கு இனம் புரியாத ஆன்மீக விழிப்புணர்வு ஏற்பட்டது. அவருடைய தாய்மாமன் வீட்டில் அமர்ந்திருந்த பொழுது தான் சாகப் போகின்றோம் என்ற உள் உணர்வு ஏற்பட்டது. முதலில் பயந்து போனாலும் தரையில் படுத்துக் கொண்டே அதைப் பற்றி மனதில் சிந்திக்கத் துவங்கினார். பிறப்பது எது, இறப்பது எது, இறந்த பின் அது போவது எந்த இடம் என அனைத்தையும் மனதில் ஆராயத் துவங்கியவர் தான் என்ற தனித்தன்மை இறந்து



குரு மூர்த்தம்



விருப்பக்ஷ மலையின் நுழை வாயில். அது விஸ்தரிக்கப்படும் முன் எடுக்கப்பட்டது



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

பக்கம் - 3

போனதைக் கண்டார். ஆன்மீக விழிப்புணர்ச்சி பெற்றார்.

அது குறித்துப் பின்னர் அவர் ஒருமுறை எழுதிய பொழுது " யார் அந்த ஞானி?, என் உடலை விட்டு மறைந்து போன, நான் பார்ததுக் கொண்டே இருந்த உருவமற்ற அந்த ஞானிதான் யார் ?. அந்த ஒரு கணத்தில் தான் என்ற தனித்துவம் மறைந்து போய் தன்னை தானே அறிந்து கொண்ட ஆத்ம ஞான நிலை ஏற்பட்டது " என்றார். அந்த எண்ணம் அவருடைய வாழ்நாள் முழுவதும் அவரிடம் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. ஆன்மீகத்தில் ஈடுபாடே இல்லாதவருக்கு, வேறு எந்த விதமான தியான பயிற்சியும் தேவைப்படாமல், தானும் எந்த விதமான முயற்சியையும் செய்யாமல் இருந்தவருக்கு தானாகவே இயற்கையிடம் இருந்து சில நிமிடங்களில் கிடைத்த அப்படிப்பட்ட ஆன்மீக விழிப்புணர்ச்சி என்ற அற்புதமான சக்தி மிக அபூர்வமாக ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்துள்ளது என்பது ஒரு ஆச்சரியமான செய்தி.


நான் ஏன் அதை " எந்த விதமான முயற்சியும் இன்றி " எனக் கூறினேன் எனில் நடந்து முடிந்த மரணம் என்ற நாடகத்தில், மரணத்தைக் குறித்து அவர் ஆராய்ந்து பார்க்கத் துவங்க அதில் இயற்கையாகவே அலருக்கு ஆன்மீக விழிப்புணர்வு ஏற்பட்டது என்பதினால்தான். அந்த நிகழ்ச்சி குறித்து ஒரு தெலுங்கு பத்திரிகையாளரிடம் இரமண மகரிஷி, அந்த சம்பவம் தனக்கு நேர்ந்தது எனக் கூறாமல் அதை இப்படி விவரித்தார். " அந்த உடல் கை கால்களை விரித்துப் போட்டபடி கீழே கிடந்தது. " தன்னுடைய உடல் என்று அவர் கூறாமல் இருந்ததினாலேயே அவர் எந்த அளவுக்கு தன்னுடைய உடலுடன் பட்டற்று இருந்திருக்கின்றார் என்பது புரியும். இனம் புரியாத எதோ ஒரு சக்தி வெங்கட்ராமன் மீது ஆதிக்கம் செய்து கீழே படுத்துக் கிடந்து அவருக்கு மரணம் என்பது தான் என்ற தனித்தன்மை பெற்ற



1922 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இரமணாஷ்ரமம்



அருணாசலேஸ்வரர் ஆலயம்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



உடலுக்குத்தானே தவிற உள்ளத்திற்குள் உள்ள ஆத்மாவுக்கு அல்ல என்ற ஆத்மார்த்த போதனையை கொடுத்தது. கீழே விழுந்த வெங்கட்ராமன் மீண்டும் எழுந்து நின்ற பொழுது முற்றிலும் தெளிவு பெற்ற, ஆன்மீக விழிப்புணர்ச்சி பெற்றவராக மாறி இருந்தார். அவர் பல துறவிகளைப் பற்றி படித்து இருந்தார், பல ஆலய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உள்ளார். ஆனால் இப்படிப்பட்ட அனுபவம் எவருக்கும் கிடைத்திருக்காது என்பதையும் நன்கே உணர்ந்தார்.

**ஜான் டேவிட் :-** அந்த அனுபவத்தை பெற்றதும் அவர் முதலில் என்ன செய்தார்? தனக்கு என்ன நடந்தது என அவர் நினைத்து இருப்பார்.


**டேவிட் காட்மன் :-** அதைப் பற்றி பல வருடங்களுக்குப் பிறகு கருத்து தெரிவித்த பகவான், முதலில் தனக்கு ஏதோ வியாதி வந்து விட்டதாகவும், அதே சமயத்தில் தனக்கு வந்துள்ள வியாதி குணப்படுத்த முடியாத வியாதியாக இருக்குமோ என்றும் நினைத்தாராம். மற்றொரு சமயத்தில் தன்னை ஆவி போன்ற தீயவை எதாவது பிடித்துக் கொண்டு விட்டிருக்குமோ எனவும் நினைத்ததாகக் கூறினார். பல வருடங்களுக்குப் பிறகு தன்னுடைய வாழ்க்கை சரித்திரத்தை முதலில் எழுதிய நரசிம்மஸ்வாமி என்பவரிடம் தன்னை ஏதோ ஒரு தீய ஆவீ பிடித்து விட்டிருப்பதாக தான் நினைத்ததாக தெரிவித்திருந்தார்.

**ஜான் டேவிட் :-** அவர் அது குறித்து வேறு எவரிடமாவது விவாதித்தாரா, அல்லது தனக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியவாவது முயன்றாரா?

**டேவிட் காட்மன் :-** வெங்கட்ராமன் தன்னுடைய வீட்டில் எவரிடமும் தனக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்துக் கூறவில்லை. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் பள்ளிக்குச் சென்று கொண்டும், குடும்பத்தில்



*பகவானுடைய தந்தை சுந்தரம் ஐயர்*



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



எப்பொழுதும் போலவே நடந்து கொண்டும் இருந்தார். ஆனால் நாளாக நாளாக அதை மறைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. 1896 ஆம் ஆண்டு அவர் பள்ளியில் பாடங்களை சரிவர செய்யவில்லை என்பதற்காக அவருக்கு நிறைய அளவு வீட்டுபாடம் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் வீட்டிலும் அவர் அதை செய்யாமல் தன்னை மறந்து தியான நிலையில் அமர்ந்து இருந்தார். அதைக் கண்ட அவருடைய சகோதரர் கேலியாகக் கூறினார் " இப்படி இருக்கும் இவனைப் போன்றவர்களுக்கு எந்த பாடம் அறிவை தரப்போகின்றது. ஒரு யோகியைப் போல பற்றின்றி இருப்பவன், குடும்ப வாழ்க்கை என்ற பந்தத்தில் எதற்காக இருக்க வேண்டும் ? "


அந்த தத்துவார்த்தமான வார்த்தைகளே வெங்கட்ராமன் வீட்டை விட்டு வெளியேற ஒரு காரணமாக அமைந்து விட்டது. மறு நாள் எவரிடமும் கூறாமல், எங்கு போகின்றோம் , தனக்கு என்ன ஆயிற்று என்றும் தெரியாமல் எவரிடமும் கூறாமல் வீட்டை விட்டு வெளியேறினார். வெளியேறும் முன் ஒரு சிறிய கடிதத்தை வைத்து விட்டுப் போனார். அதில் "நல்லதிற்கான பயணத்தை மேற் கொண்டு உள்ளதாகவும், தன்னை தேடி அலைந்து பணம் செலவு செய்ய வேண்டாம் எனவும், தனக்குக் கிடைத்த கட்டளைப்படி தனது தந்தையை தேடி அங்கிருந்து போகிறேன் " எனவும் எழுதி வைத்து விட்டுக் கிளம்பினார். அவருடைய வீட்டின் வடக்குப் பக்கத்தில் பல நூறு மைல் தொலைவில் இருந்த அருணாசலாவை நோக்கி பயணித்தார். அவர் இருந்த இடத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு சாதாரணமாக ஒரே நாளில் சென்றுஇருக்க வேண்டிய இடத்திற்கு செல்ல அவருக்கு மூன்று நாட்கள் பிடித்தது. 1896 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று அங்கு சென்றவர் கடைசிவரை அங்குதான் இருந்தார்.

**ஜான் டேவிட் :-** அருணாசலா என்ற அந்த இடத்தைப்



*சேஷாத்ரி ஸ்வாமி*

பற்றிய மகிமையையும், அது அளிக்கும் செய்தி பற்றியும் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், இரமண மகரிஷி அங்கு செல்லும் முன்பும், அங்கு அவர் சென்ற பின்னும் விளங்கிய நிலைமையைப் பற்றிக் கூறுவீர்களா ?



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



டேவிட் காட்மன் :- திருவண்ணாமலை நகரம் அந்த மலையுடன் தன்னை பின்னி பிணைத்து வைத்துள்ள ஒரு புனித இடம். ஆட்டோ, தொலைக் காட்சிப் பெட்டிகள் போன்ற பல வசதிகளும் மற்றும் பரவலான முன்னேற்றமும் அடைந்துள்ள அந்த இடத்தின் சூழ்நிலையும் அங்குள்ள மக்களும் இத்தனை நூற்றாண்டுகள் ஆகியும் இன்னமும் மாறாமல் அதே பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தபடிதான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். 1200 ஆம் ஆண்டில் மார்க்கோ போலோ என்பவர் சீனாவில் இருந்து இந்தியா வழியே சென்று கொண்டு இருந்தார். சென்றார். அப்பொழுது அவர் இங்குள்ள மக்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருந்தனர் எனக் கூறி இருந்தாரோ, அதே பழக்க வழக்கங்களைக் கடை பிடித்துக் கொண்டுதான் இன்னமும் அங்குள்ள மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். திருவண்ணாமலையில் முக்கியமான ஒரு லிங்கம் உள்ளது.

தெற்கில் உள்ள ஐந்து முக்கியமான லிங்கங்கள் நீர், நிலம், ஆகாயம், காற்று மற்றும் நெருப்பு போன்ற தத்துவங்களைக் கொண்டு அமைந்துள்ளன. அவற்றில் நெருப்பு என்ற தத்துவத்தை பிரதிபலிப்பதுதான் திருவண்ணாமலை லிங்கம். ஏற்கனமே பிரபலமாக இருந்த அந்த இடம் கி.பி 500 ஆண்டு முதல் இன்னமும் பிரபலம் அடைந்தது. அந்த கால கட்டத்தில் பல முனிவர்கள் தமிழ்நாட்டின் பல பகுதிக்கும் வந்தவண்ணம் இருந்தனர். அவர்கள் அருணாசலாவை சிவபெருமான் வசிக்கும் இடம் என்று கூறி அந்த இடத்திற்கு அனைவரும் செல்ல வேண்டும் எனஅறிவுறுத்தி வந்தனர். அதற்கு முன்பு அந்த


இடத்தின் வரலாற்றை பற்றி எவரும் எழுதவும் இல்லை, ஆதாரபூர்வமான எந்த விதக் கல்வெட்டுக்களும் கிடைக்கவில்லை.

1500 ஆண்டுகளுக்கு முன்புதான் திடீர் என அந்த இடத்தின் மகிமைகளைப் பற்றி மக்கள் எழுதத் துவங்கினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள்ளான காலத்தில் அந்த இடத்தில் வந்து வசித்த மிக முக்கியமான மற்றும் பிரபலமான பல்வேறு முனிவர்களில் இரமண மகரிஷிதான் முதன்மையானவர் என்பது என் கருத்து.

**ஜான் டேவிட் :-** ஆமாம், அத்தனைப் பெரிய ஆலயம் எப்பொழுது கட்டப்பட்டது?

**டேவிட் காட்மன் :-** ஒரு காலத்தில் அந்த இடத்தில் எதோ ஒரு சிறிய அளவிலான ஒரு ஆலயம் இருந்திருக்கின்றது. ஏன் எனில் அனைத்து செய்திகளும் அந்த ஆலய சுவர்களில் பொறிக்கப்பட்டு உள்ளன. அங்கிருந்த எந்த மன்னனாவது எதாவது ஒரு யுத்தத்தில் வெற்றி பெற்றால் அங்குள்ள ஆலய சுவற்றில் அந்த செய்தியை பொறிக்குமாறு கூறி உள்ளனர். எவருக்காவது 500 ஏக்கர் நிலம் தானம் செய்தால் அதையும் அந்த சுவற்றில் செதுக்கச் சொல்லி உள்ளனர். ஆகவே அங்கு சென்று அவற்றைப் பார்த்தால் யார், யார் என்ன செய்து இருந்தனர் என்பது விளங்கிவிடும்.

அந்த திருவண்ணாமலை ஆலயம் ஒன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இருக்கலாம் என்றே முதலில் கிடைத்துள்ள கல்வெட்டு ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. அனேகமாக 1600ஆம் நூற்றாண்டுவரை அந்த ஆலயம் மெல்ல மெல்ல பெரியதாக்கப்பட்டுக் கொண்டே இருந்திருக்க வேண்டும். 17 ஆம் நூற்றாண்டில்தான் தற்பொழுது உள்ள அளவில் அது கட்டப்பட்டு இருக்க வேண்டும். அந்த ஆலயத்தைப் இதுவரை பார்க்காதவர்களுடைய கவனத்திற்காக இந்த செய்தியை தருகின்றேன் - அந்த ஆலயத்தின் ஒவ்வொரு பக்கச்




சுவர்களும் 200 கஜ நீளத்தில் உள்ளது. கோபுரம் சுமார் 200 அடி உயரம் இருக்கும்.


**ஜான் டேவிட் :-** பகவான் அங்கு வந்த பொழுது இருந்த ஆலயத்தின் நிலைதானா அது ?

**டேவிட் காட்மன் :-** தமது இளமை காலத்திலேயே அருணாசலா என்பது புனிதமான கடவுள் என்ற அளவுக்கு பகவானுக்குப் புரிந்து இருந்தது. அவர் ஒருமுறை எழுதியிருந்தார் “ நான் விவரம் அறியாத வயதில் இருந்த பொழுது என்னுள் ஆன்மீக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதில், பரந்து விரிந்து கிடக்கும் அந்த அருணாசலாவின் பங்கே இருந்தது. ” தனது வாழ்க்கையில் தான் அங்குதான் போய இறுதிவரை தங்கி இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும் என அவர் நினைத்தும் பாாத்திருக்கவில்லை. அவருக்குத் தோன்றியது “ அது ஒரு புனித இடம், புனித புமி, அது உண்மையில் ஒரு கடவுளே ” .அந்த இடம் புனித யாத்திரை மேற்கொள்ளும் இடம் என மட்டுமே நினைத்திருந்தவர், நேரிலே அருணாசலாவைக் கண்டதும் வியந்து நின்றார்.

அவர் சிறுவனாக இருந்த பொழுது ஒரு முறை ஒரு உறவினர் தான் அருணாசலாவுக்கு யாத்திரை போய்விட்டு வந்ததாக கூறியது நினைவுக்கு வந்தது. அப்பொழுது அவருக்கு அதைப் பற்றிய எந்த விதமான எண்ணமும் இருந்ததில்லை. அந்த இடத்தைக் குறித்து அவர் நினைத்தது என்னவெனில் இறந்து போன மகான்களின் ஆத்மாக்கள் அந்த புனித இடத்திற்கு சென்று விடும். அதன் பின் அது இருந்த இடத்தை, அட்லாஸ் எனப்படும் வரை படத்தில் பார்த்து இருக்கின்றார். தான் ஞானோபதேசம் பெற்று, தன்னை அந்த இடத்திற்கு வந்து தங்கும்படி செய்ததைக் கண்ட பின்னர்தான் அதற்கு எத்தனை பெரிய சக்தி இருந்திருக்கின்றது என்பதை புரிந்து கொண்டார். அவருக்கு அந்த மலையுடன் இருந்த ஈடுபாடு எந்த அளவில் இருந்தது என்பது பற்றி



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்




அவரே கூறியதாக நான் முன்னர் எழுதியது இது.

“ஜடம் போலத் தெரியும் அந்த அண்ணாமலையைப் பார். அதன் செயல்கள் நம்முடைய எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவை. அவர் விவரம் அறியாத வயதில் இருந்த பொழுது அவருக்கு ஆன்மீக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதில், பரந்து விரிந்து கிடக்கும் அருணாசலாவின் பங்கே முழுமையாக இருந்தது. அந்த பருவத்தில் அவருக்கு திருவண்ணாமலை என்றால் என்ன என்றே தெரியாமல் இருந்தார். அந்த மலை அவரை தன்னிடம் ஈர்த்துக் கொண்ட பொழுது அதன் அருகில் சென்று பார்ததார். அமைதியாக உணர்வற்று ஜடம் போல காட்சி தந்தது அது.

அவர் அந்த ஆலயத்தின் முன்னால் சென்று நின்ற பொழுது மூடி இருந்த அந்த ஆலயத்தின் அனைத்துக் கதவுகளும் தாமாகவே திறந்து கொண்டன. அவர் உள்ளே செல்லச் செல்ல, கற்பக்கிரகம், கருவறை என அனைத்துக் கதவுகளும் தாமாகவே திறந்து கொண்டு அவர் உள்ளே செல்ல வழி விட்டன. உள்ளே சென்றவர் அந்த லிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்.” இந்த செய்தியை நீங்கள் எதிலும் படித்து இருக்க முடியாது.

ஆனால் அந்த செய்தியை அவர் வெளி உலகிற்குக் அப்பொழுது கூற விரும்பவில்லை. அதற்கும் காரணம் இருந்தது. அவரை சுற்றி நடக்கும் அற்புதங்களை மற்றவர்கள் தெரிந்து கொள்வதை அவர் விரும்பவில்லை. மேலும் அவற்றுக்கு அவர் முக்கியத்தவமும் தந்தது இல்லை. இரண்டாவது காரணம், தான் உள்ளே சென்று அங்கிருந்த லிங்கத்தை கட்டிப் பிடித்துக் கொண்ட விஷயத்தை ஆலயத்தில் இருந்த பூசாரிகள் தெரிந்து கொண்டால் அவர்கள் அதை விரும்ப மாட்டார்கள். அவரும் பிராமண குலத்தில் பிறந்து இருந்தாலும் அந்த சம்பவத்தை கேள்விப் பட்டால் உடனே அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும் என புனித பூஜையை செய்ய ஏற்பாடுகள் செய்வார்கள். இல்லை எனில் அந்த லிங்கத்தை மீண்டும் வெளியில்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



எடுத்து புதியதாக பிரதிஷ்டை செய்ய ஏற்பாடுகள் செய்வார்கள் என கருதினார். அவற்றை எல்லாம் நன்கு யோசனை செய்து பார்த்தப் பின் மௌனமாக இருந்து விட்டார்.

**ஜான் டேவிட் :-** நாங்கள் அந்த ஆலயத்தில் இருந்துதான் வருகின்றோம். அதில் பெரிய பூட்டு தொங்கிக் கொண்டு உள்ளதைப் பார்த்தோம்.

**டேவிட் காட்மன் :-** உண்மைதான். எவருமே அந்த லிங்கத்தின் அருகில் செல்ல முடியாது. அந்த ஆலயத்தில் மேற்பார்வை இடுவதை பரம்பரைத் தொழிலாகலே ஒரு சிலர் செய்து வருகின்றனர். அந்தப் பரம்பரையினரைத் தவிற வேறு எவரும் அந்த லிங்கத்தின் முன்பாக சுமார் பத்தடி உயரத்தில் உள்ள இரும்புக் கதவைத் தாண்டிச் செல்ல முடியாது.

அதைக் குறித்து கூறப்படும் மறறொரு கதை உண்டு. மதுரையில் இருந்த பகவான் தான் விழிப்புணர்ச்சி பெற்றப் பின் உடல் முழுவதும் தாங்க முடியாத அளவு எரிச்சல் ஏற்பட்டது. தொடர்ந்து கொண்டிருந்த அந்த எரிச்சல் திருவண்ணாமலைக்கு சென்று அந்த லிங்கத்தை கட்டி பிடித்துக் கொண்ட பின்னர்தான் விலகியது. அந்த லிங்கம் அவர் உடலில் பட்டப் பொழுது அந்த எரிச்சல் பூமியில் இறங்கி மறைந்து விட்டதைப் போல அவருடைய உடலை விட்டு விலகியது. அந்த லிங்கம் அருணாசலாவுடன் இணைத்துக் கூறப்படுவதல்ல, மாறாக அதுவே அருணாசலா ( மலை ) என்பதையும் அந்த சம்பவம் விளக்கியது. லிங்கத்தைக் கட்டிப் பிடித்த அந்த நிகழ்ச்சியின் மூலம் அவருக்கும் அருணாசலா என்ற அவருடைய குருவுக்கும் ஒரு பிணைப்பு ஏற்பட்டது.அந்த ஒரு நிகழ்ச்சிக்குப் பின்னர் பகவான் கருவரைக்குள் சென்றதாக நான் கேள்விப்பட்டதே இல்லை. தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் பகவான் அருணாசலா என்ற மலை அடிவாரத்தில் கழித்தாரே ஒழிய, 1896 ஆண்டிற்குப் பிறகு அவர் அந்த


ஆலயத்திற்குள் அவர் செல்லவே இல்லை

ஜான் டேவிட் :- ஆக அதன் பின் அவர் அந்த ஆலய எல்லைக்குள இருந்த பகுதியில் தான் இருந்திருக்க வேண்டும் என நான் நினைத்தால் அது சரியாக இருக்குமா ?

டேவிட் காட்மன் :- திடீர் என அந்த இடத்திற்கு வந்தவர் சில மாதங்கள் அந்த ஆலயத்தின் பல பகுதிகளில் தங்கி இருந்தார். அந்த இடத்திற்கு வந்த அன்றே தன்னிடம் இருந்த அனைத்து பணத்தையும, துணிகளையும் அந்த ஆலயத்தின் நீர் குளத்தில் போட்டு விட்டு தலையை மொட்டை அடித்துக் கொண்டு துறவி போல தன்னை மாற்றிக் கொண்டு விட்டார். தன்னை மறந்து பல மணிநேரம் தியானத்தில் அமர்ந்து இருப்பார். அவர் தங்களுக்கு ஒரு ஆசானாக இருக்க வேண்டும் என்ற நினைப்போ என்னவோ அங்கிருந்த மக்கள் அவரை கட்டாயப்படுத்தி உணவு தந்து பல விதங்களிலும் அவருக்கு உதவினர். அப்படி நடந்து இருக்கவில்லை எனில் அவர் தன்னுடைய உடலைத் துறந்து மரணம் அடைந்து இருப்பார். முதல் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் அங்கிருந்த அவருக்கு தன்னை சுற்றி நடந்த எதுவுமே தெரியாது. அவர் அறிதாகத்தான் சாப்பிட்டார். ஒரு முறை அவர் உடல் நாற்றம் அடிக்கத் துவங்கியது. தன்னுடைய கால்கள் வெடித்துப் புண்கள் ஆகி இருந்ததைக் கூட அவர் கவனிக்கவில்லை.


ஜான் டேவிட் :- அந்த ஆலயத்தின் அடியில் இருந்த பாதாள அறையில் அவர் இருந்த பொழுது அந்த நிலைமை ஏற்பட்டதா ?

டேவிட் காட்மன் :- ஆமாம். நீங்கள் அந்த இடத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அதன் பெயர் பாதாள லிங்கம். அந்த இடத்தில் அவர் ஆறு வாரங்கள் அந்த குறிப்பிட்ட நிலையில் இருந்தார். அவரை அங்கிருந்து குண்டுக்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்





கட்டாக துாக்கிக் கொண்டு போயதான் அவற்றை சீர் செய்ய வேண்டி இருந்தது.


முதலில் சில வருடங்கள் கண்களைத் திறந்து பார்த்தாலும் அந்த உலகம் அவருக்கு இனம் புரியாத ஒன்றாகவே தோற்றம் அளித்தது. அவர் எழுந்து நின்று சில அடிகள் நடக்க முயன்றது உண்டு. ஒரிரு நாட்கள் எழுந்திருக்க முடியாமல் கால்கள் மடங்கி விழுந்தால் தான் பல நாட்களாக சமாதி நிலையில் இருந்ததை உணர முடிந்தது. சில நேரங்களில் தான் கண் முழித்துப் பார்த்த பொழுது தான் முதலில் இருந்த இடத்தை விட்டு வேறு ஒரு இடத்தில் இருப்பதைக் கண்டார். அந்த நிலையில் அந்த ஆலயத்தில் பல்வேறு மண்டபப் பகுதிகளுக்கும் தான் சென்று இருந்தது கூட அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

**ஜான் டேவிட் :-** அவரை பெரிய மகான் என்றோ அல்லது எதோ சக்தி பெற்ற மனிதர் என்றோ எவராவது கருதி இருக்கின்றார்களா ?

**டேவிட் காட்மன் :-** அவரைப் பற்றி ஒரு சிலர் அப்படி நினைத்து உள்ளனர். பாதாள லிங்கத்தில் இருந்த சேஷாத்தரி ஸ்வாமிகள் அவரைப் பற்றி அப்படி எண்ணி இருக்கின்றார். அவரைக் காப்பாற்ற பல முறை அவர் முயன்றும் அவரால் அதை நிறைவேற்ற முடியவில்லை. அவரைத் தவிற பகவானுடன் பேசிய சிலருடைய மனதில் அவர் பெரும் ஆன்மீக நிலையை எட்டியவர் என்ற எண்ணம் இருந்தது.

**ஜான் டேவிட் :-** அவர்கள் அனைவரும் அந்த ஆலயத்தில் இருந்தவர்களா ?

**டேவிட் காட்மன் :-** சேஷாத்தரி ஸ்வாமிகள் அனைத்து இடத்திலும் வாழ்ந்திருந்தவர். அவரைத் தவிற இன்னும் ஓரிருவர் அவரை சக்தி பெற்ற மகான் என நினைத்தது உண்டு. சிலர் அவர் வாழ்ந்து வந்த மிக எளிமையான



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

**பக்கம்- 12**

பாதாள லிங்கம்




*குகை நமச்சிவாயா ஆலயம் செல்லும் வழி*

வாழ்க்கையைப் பார்த்து விட்டு அவர் மிகப் பெரிய ஆன்மீகவாதியாக இருக்கலாம் என நினைத்தனர். பல ஆண்டுகளுக்குப் பின் அந்த ஆசிரமத்தில் வக்கீலாக பணியில் சேர்ந்த ஒருவருடைய பாட்டனார் அவரைப் பற்றி தனக்கு முன்பே தெரியும் எனக் கூறினார்.



*விருபக்ஷா குகைக்கு செல்லும் நுழைவாயில்*




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

## பாகம்-2

## அவர் மலை மீது தனது இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளக் காரணம் என்ன ?


**ஜான் டேவிட் :-** அந்த காலத்தில் அவருடைய வாழ்க்கை முறைகளைப் பார்த்தவர்கள் அவரை பைத்தியக்காரர் என நினைத்து இருந்திருக்கலாம் அல்லவா. உதாரணமாக இன்று காலை ஆசிரமத்தில் பகவானைப் போன்றே உடை உடுத்திக் கொண்டு ஒரு பிரெஞ்ச் நாட்டவர் போல பேசிக் கொண்டிருந்தவர் ஒரு வேளை ஞானியாகவோ அல்லது பைத்தியக்காரராகவோ கூட இருக்கலாம்.அதை அந்த நேரத்தில் உடனடியாக முடிவு செய்வது கடினம் அல்லவா ?

**டேவிட் காட்மன் :-** நாள் முழுவதும் ஒரே இடத்தில் அமர்ந்திருந்தபடி, அசையாமல இருப்பவரை சந்தேகக் கண்ணுடன் நோக்க முடியாது. எல்லோரும் அப்படி அமர்ந்து இருக்க முடியாது. ஆடாமல் அசையாமல், தாமரை மலர் போல ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு இருந்தால் இலவசமாக உணவு கிடைக்கும் என்ற நிலை இருந்தால் உங்களால் அந்த நிலையில் அமர்ந்து கொண்டு இருக்க முடியுமா? பகவான் இங்கு இருந்த பொழுது, அங்கே இரமணாஷ்ரமத்திற்கு அருகில் இருந்த பலக்கோடு என்ற இடத்தில் வாழ்ந்து கொண்டு இருந்த கோவிந்த பட் என்ற சாது, தானும் கண்களை மூடி வைத்திருந்தபடி பதினெட்டு மணி நேரம் அமர முயன்று, அதில் தோல்வியைத் தழுவினார். அப்படிப்பட்ட செயல்களை செய்ய மனதை முழுமையாகக் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டுள்ள ஆன்மீக விழிப்புணர்ச்சி பெற்றவர்களினால் மட்டுமே செய்ய முடியும்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்






பழனிசாமி

ஜான் டேவிட் :- சரி, என்ன காரணத்தினால் அவர் மலைக்குப் போக வேண்டியதின் அவசியம் ஏற்பட்டது ?

டேவிட் காட்மன் :- குருமூர்த்தம் என்ற இடத்திற்கு சென்று இருக்கின்றீர்களா ? இந்த இடத்தில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ளது அந்த ஆலயம். அந்த ஆலயத்தின் அருகில் இருந்த மாமரத் தோட்டத்தின் சொந்தக்காரன் பகவானை அங்கு வந்து தங்கிக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்க அவரும் அங்கு சென்று அந்த தோட்டத்தில் சுமார் ஒன்றரை வருட காலம் இருந்து வந்தார். ஐம்பத்தி நான்கு வருடங்களில் அவர் மலைப் பகுதியில் இருந்து வெகுதூரம் போனது அந்த இடத்திற்கு மட்டுமே. அங்கு சென்றும் அவர் தன்னை மறந்த நிலையில்தான் அமர்ந்து கொண்டு இருந்திருக்கின்றார். அவருடைய நகங்களும் மிகவும் நீண்டு வளர்ந்து விட்டிருக்க அந்த சில வருடத்தில் அவர் தன்னுடைய தலை முடியை சீராக வாரி விட்டுக் கொள்ளவோ, குளிக்கவோ இல்லை. பல வருடங்களுக்குப் பின் ஒருமுறை அது குறித்து அவர் கூறுகையில் தலை முடியை சீவாமல் இருந்தால் அது வேகமாக வளரும் என்பது மட்டும் அல்ல சீக்கும் பிடித்து விடும் என்றார். அதனால்தான் அங்கிருந்த பொழுது அவர் தலை முடி சீக்கு பிடித்து, நகங்கள் மிகவும் நீண்டு வளர்ந்து இருந்தன. அவருக்கு பதினாறு வயதான பொழுதே அவரைப் பார்த்தவர்கள் இவர் நூற்று வருடங்களுக்கு மேலாக இங்கு இருந்திருக்கின்றார் போல் தெரிகின்றது என தங்களுக்குத் தானே பேசிக் கொண்டு சென்றுள்ளனர்.

ஜான் டேவிட் :- நீங்கள் கூறுவதைப் பார்த்தால் அவர் நிச்சயமாக ஒரு துறவியாக இருந்திருக்க வேண்டும்.

டேவிட் காட்மன் :- அது யாருக்குப் புரிந்திருந்தது? உள்ளூர் மக்கள் அவரைப் பற்றி எந்தவிதமான எண்ணமும் இல்லாமல் இருந்துள்ளனர். அந்த




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

காலத்தில் அதாவது 1900 ஆம் ஆண்டில் திருவண்ணாமலையின் ஜனத்தொகை 20,000 வரை இருக்கும். ஆனால் அவரைப் பார்க்கவோ 20 பேர்களே வந்தனர். அதாவது 99.9 சதவிகித மக்களுக்கு அவரைப் பற்றி தெரிநதிருக்கவில்லை அல்லது அவரைப் பற்றி கவலைப் படவில்லை எனத் தெரிகின்றது.

1890 ஆம் ஆண்டில் அவருடைய தாய் மாமன் அவரை அழைத்துச் செல்ல அங்கு வந்து “அவர் அங்கு என்ன செய்கின்றார்” என உள்ளூர் மக்களிடம் கேட்டார். அவரிடம் அந்த சிறுவன் ( பகவான் ) நாடகம் ஆடுகின்றார் எனவும் அவரை கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லும்படியும் உள்ளூரில் இருந்தவர்கள் கூறி உள்ளனர். அதற்கு பல வருடங்களுக்குப் பிறகு கூட திருவண்ணாமலையில் பல மக்கள் அவர் மீது நல்ல எண்ணம் கொண்டிருக்கவில்லை. அவரைப் பார்க்க வந்த ஒரு சிலருடைய அனுபவங்கள் கூட ஒருதலைப்பட்சமான கருத்துக்களாகவே இருந்தது.

**ஜான் டேவிட் :-** அப்படி என்றால் அவர் இருபது வயதான பொழுதே அவருக்கு பக்தர்கள் இருந்திருக்கின்றார்களா ?

**டேவிட் காட்மன் :-** அவர் பதினாறு வயதான பொழுது அந்த இடத்திற்கு வந்தார். அவருக்கு உதவியாக இன்னொருவர் இருந்திருக்கின்றார். எப்பொழுதாவது மட்டுமே ஒரு சிலர் அவரைக் காண வந்தனர். போன நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்துதான் அவரைக் காண சிலர் தொடர்ந்து வரலாயினர். இருபதாம் நூற்றாண்டில் அவருக்கு ஓரளவு பக்தர்கள் இருந்தனர். சிலர் அவருக்கு உணவு கொண்டு வந்து தந்தனர். சிலர் அவரைக் காண மட்டுமே வந்தனர். சில நேரங்களில் அவரைக் காணும் ஆவலில் பலர் அங்கு வந்து, துாரத்தில் இருந்தே அவரை வேடிக்கைப் பார்த்து விட்டுச் திரும்பச் சென்று விடுவார்கள். வந்து




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

சென்று கொண்டிருந்த ஒரு சில யாத்ரீகர்களைத் தவிற அவருக்கு நான்கு அல்லது ஐந்து பக்தர்கள் மட்டுமே இருந்தனர்.

ஜான் டேவிட் :- அவர்கள் அனைவரும் உள்ளுரைச் சேர்ந்தவர்களா ?

டேவிட் காட்மன் :- ஆமாம் அவர்களில் சிலர் உள்ளுரைச் சேர்ந்தவர்கள்தாம். அதில் அகிலாண்டம்மாள் என்ற பெண்மணி நாற்பது மைல் தொலைவில் இருந்து வருவது உண்டு. சில சமயங்களில் அவள் அவருக்கு உணவு கொண்டு வருவதும் உண்டு. மற்றொருவர் சிவப்பிரகாசம் என்பவர். அங்கிருந்த மற்றொரு ஊரில் வசித்து வந்த அவர் தொடர்ந்து வந்து கொண்டு இருந்தார். மற்றவர்கள் திருவண்ணாமலையை சேர்ந்தவர்களே.



ஜான் டேவிட் :- அதனால்தான் அவர் மாமரத் தோட்டத்தில் இருந்து மலைப் பகுதிக்கு சென்று விட்டாரா ?

டேவிட் காட்மன் :- 1901 ஆம் ஆண்டில்தான் அவர் விருபாக்ஷா குகைக்குச் சென்றார். அதில் பதினைந்து ஆண்டுகள் வசித்தார். அந்த குகையில் ஆண்டு முழுவதும் ஒருவர் வசிக்க முடியாது. வெய்யில் காலங்களில் அந்த குகைக்குள் வெய்யில் மிக அதிகம் இருக்கும். ஆகவே அவர் அந்த குகையில் வருடத்தில் எட்டு மாதங்கள் தங்கி இருந்த பின், பக்கத்தில் இருந்த மற்ற சிறு குகைகள், குகை நமச்சிவாயா ஆலயம், சத்குரு ஸ்வாமி குகை, மற்றும் மாமரத் தோட்டத்தில் இருந்த குகை போன்றவற்றில் சென்று வசித்து வந்தார். அவை அனைத்துமே விருபக்ஷா குகையில் இருந்து ஐந்து நிமிடத்தில் சென்று அடையும் துாரத்தில்தான் இருந்தன. அந்த இடத்தில் சாதுக்கள் உபயோகித்து வந்த முலைத் தீர்த்தம் என்ற குளமும்

இருந்தது. அந்த மலைப் பகுதியில் இருந்த அனைத்து சாதுக்களும் தங்கள் தேவைக்கு அந்த குளத்து நீரையே நம்பி இருந்தனர்.

**ஜான் டேவிட் :-** இப்போது அந்த இடத்தில் பசு மாடம் வந்து விட்டது போலத் தெரிகின்றதே.

**டேவிட் காட்மன் :-** அப்படிப்பட்டவை நடைபெறுவது தவிர்க்க முடியாதது.


**ஜான் டேவிட் :-** குகைக்குப் பக்கத்தில் ஓடுகின்றதே, அந்த ஆறு முன்னமே இருந்ததா?

**டேவிட் காட்மன்** :-பகவான் அந்த குகையில் இருந்த பொழுது அது இல்லை. ஒரு முறை அந்த இடத்தில் பெரும் சூறாவளி வீசிய பொழுது அங்கிருந்த பாறங்கற்கள் பறந்து அங்கும் இங்கும் சென்று விழுந்தன. சூறாவளி அடங்கியதும் அங்கிருந்த குப்பை கூளங்களை அப்புறப்படுத்திய பொழுது ஒரு இடத்தில் ஊற்றுபோல எதோ தெரிந்தது. அதை அவருடைய பக்தர்கள் தங்களுக்கு அருணாசலா தந்த பரிசு என்றே நினைத்தனர். பகவானும் அவர்களுடைய கருத்தை ஆமோதித்தார்.


**ஜான் டேவிட் :-** அது அற்புதமான நீர்த்தேக்கம் அல்லவா ?

**டேவிட் காட்மன் :-** ஆமாம். ஆனால் அது பருவ காலத்தில் மட்டும் நீர் ஊறும் தேக்கம். இரண்டு அல்லது மூன்று முறை நல்ல மழை பெய்தால் மட்டுமே அதில் நீர் ஊற்று இருக்கும். ஆகவே அது நிரந்தரமாக நீர் தரும் குளம் என நம்பிக் கொண்டு இருக்க முடியாது.

**ஜான் டேவிட் :-** ஸ்கந்தாஷ்ரமத்தின் வழியாக ஓடுவதும் அதே ஊறுதானா?



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



டேவிட் காட்மன் :- இல்லை. விருபக்ஷா குகை அருகில் உள்ளது வேறு குளம். ஸ்கந்தாஷ்ரமத்தின் பக்கத்தில் ஓடும் ஊற்று மிகவும் மேன்மையானது. பகவான் குகைக்குச் சென்ற பொழுது அது அங்கு இல்லை. தினமும் அவர் மலைக் குகையில் இருந்து அந்த ஊற்று இருந்த இடம் வரை நடந்து செல்வது உண்டு. ஒரு முறை அந்த இடத்தில் நீர்த்திட்டு போல எதோ ஒன்று தெரிந்ததைக் கவனித்தவர் அந்த இடத்தில் நீர் ஊற்று இருக்க வேண்டும் என்று கூறினார். அங்கு சென்று ஆராய்ந்த பொழுது அவர் கூறியது போலவே 600 அடி உயரத்தில் அந்த மலையில் வற்றாமல் நீர் தரும் வகையில் ஒரு நீர் ஊற்று இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. ஸ்கந்தாஷ்ரமத்தின் பக்கத்தில் ஓடும் அந்த ஆற்று நீர்தான் அந்த ஊருக்கு தேவையான குடிநீர் தரும் ஆறாகும் .

ஜான் டேவிட் :- அப்படி என்றால் அப்பொழுது ஸ்கந்தாஷ்ரமம் நிறுவப்பட்டிருக்கவில்லையா?

டேவிட் காட்மன் :- இல்லை. போன நூற்றாண்டில்தான் கந்தஸ்வாமி என்பவர் அந்த கட்டிடத்தைக் கட்டினார். அவர்தான் அந்த இடத்தில் கடுமையாக உழைத்து அதைக் கட்டினார். 45 கோண அளவில் மேடும் பள்ளமுமாக இருந்த அந்த மலைப் பகுதியை ஒரே சமனாக்க, மற்றொரு பகுதியில் இருந்து மண்ணையும் கற்களையும் கொண்டு வரச் செய்து சமனான நிலப்பரப்பு போல அந்த இடத்தை மாற்றி அமைத்து அதன் மீது கட்டிடம் கட்டினார். அவர் அங்கு பல விதமான மாம்பழ மரங்களையும் தேங்காய் மரங்களையும் நட்டு வளர்த்தார். அவற்றில் பல இன்றும் உள்ளன. அந்த இடம் தற்பொழுது மிக அற்புதமான இடமாக அமைந்து விட்டது.

**ஜான் டேவிட் :-** ஆக பகவான் அந்த இடத்தில் சென்ற பொழுது அந்த கட்டிடமும் மாடியும் இருந்து அது குடியேறும் நிலையில் இருந்திருக்கின்றது அல்லவா ?


**டேவிட் காட்மன் :-** ஆமாம், சிறிய அளவில் மாடி இருந்தது. அங்கு சில செடிகள் போடப்பட்டன. சிறு குடிலும் இருந்தது. ஆனால் அது அனைவரும் தங்கும் அளவு பெரியதாக இல்லை என்பதினால் பக்தர்கள் நிதி திரட்டி அதை பெரியதாகக் கட்டி முடித்தனர். அது இன்னமும் உள்ளது.

**ஜான் டேவிட் :-** பகவானுடன் ஆறுபேர்களாவது இருந்திருப்பார்களோ? அது குறித்து உங்களுக்குத் தெரியுமா ?


**டேவிட் காட்மன் :-** விருபக்ஷா குகையில் அவருடன் ஐந்து அல்லது ஆறு பக்தர்கள் இருந்திருக்கலாம். பகவான் ஸ்கந்தாஷ்ரமமத்தில் குடியேறிய பொழுது அவருடன் இரவு பகலாக அங்கேயே தங்கி இருந்து கொண்டு அவருடன் உறங்கி எழுந்த பக்தர்களின் எண்ணிக்கை பத்து அல்லது பன்னிரண்டு இருக்கும். மற்றவர்கள் அங்கு வந்து அவரைப் பார்த்து விட்டுச் சென்றவர்கள்.

**ஜான் டேவிட் :-** அவர் குகையில இருந்த பொழுதும் அவருடன் சிலர் இருந்தார்களா ?

**டேவிட் காட்மன் :-** ஆமாம், அவருடன் தங்கி, அங்கேயே உணவருந்திக் கொண்டு படுத்து உறங்கி இருக்கின்றனர். காலை வேளைகளில் அவர்களில் சிலர் வெளியில் சென்று வேலை செய்து விட்டு திரும்பினார்கள். 1914 ஆம் ஆண்டு அங்கு பகவானுடைய தாயார் வரும்வரை ஆண்கள் மட்டுமே தங்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். அந்த குகை தங்கிக் கொள்ள வசதியான இடமாக இருக்கவில்லை என்றாலும்



அதை ஆண்களுடைய வாஸஸ்தலமாக நினைத்து ஒரு சன்யாசி போல அவர்களும் இருந்து இருக்கின்றனர். முதலில் அவர்கள் அவருடைய தாயாரை அங்கு வந்து தங்க அனுமதிக்கவில்லை. ஆகவே பகவான் அவளை தங்க அனுமதிக்க மறுத்தால் தானும் அவளுடன் குகையை விட்டு வெளியேறிச் சென்று விடுவதாகக் கூறியதினால் அவர்கள் அதன் பிறகு அதற்கு ஆட்சேபணைத் தெரிவிக்கவில்லை.



**ஜான் டேவிட் :-** அனேகமாக பகவான் தனியாகவே இருந்தபடி எவருடனும் பேசாமல் மௌனமாக இருப்பது போல் அல்லவா தோற்றம் தந்திருக்கின்றார். ஆனால், அது உண்மையல்ல, அவர் குகையில் இருந்த பொழுது மற்றவர்களுடன் பேசாமலோ இல்லை ஒதுங்கியோ இருந்திருக்கவில்லை என நினைக்கலாமா ?

**டேவிட் காட்மன் :-** அவர் பலவிதமான குணங்களுடன் வாழ்ந்து இருக்கின்றார். 1890 ஆம் ஆண்டில் இளைஞனாக இருந்த பொழுது அவர் எவருடனும் அதிகம் பேசியது இல்லை. கண்களை மூடிக்கொண்டு பல மணி நேரம் மௌனமாக இருந்து இருக்கின்றார். ஆலயங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமர்ந்து இருந்த பொழுது நடந்த அனைத்தும் தெரிந்தே இருந்தது. ஏன் எனில் பல வருடங்களுக்குப் பிறகு அப்பொழுது நடந்த சில நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறி இருக்கின்றார். ஆனால் அப்பொழுதும் அவர் அரிதாகவே அவர் பேசினார். 1906 ஆம் ஆண்டுவரை சுமார் பத்து வருட காலத்திற்கு அவர் அதிகம் பேசவே இல்லை. அவர் மௌனமாக இருக்க வேண்டும் என்பதல்ல, அவரால் பேச முடியவில்லை என்பதே காரணம். பேசத் துவங்கினால் முதலில் தொண்டையில் இருந்து ஒருவிதமான கனைப்புச் சப்தம் ஏற்படத் துவங்கும். சில நேரங்களில் மூன்று அல்லது நான்கு முறை முயற்சி செய்த பின்னரே வார்த்தைகள் வெளியாயின. பேச முடியாமல் கஷ்டப் பட்டதினால் மௌனமாக இருந்தார்

ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

என்பதே உண்மை.

1906 மற்றும் 1907 ஆம் ஆண்டு வாக்கில் மெல்ல பேசத் துவங்கியவர் தன்னுடன் இருந்தவர்களுடன் நிறைய பேசத் துவங்கினார். அதே நேரத்தில் அவர் அருணாசலாவில் சுற்றிக் கோண்டும் இருந்தார். அது மட்டுமே அவருக்கு மனதுக்குப் பிடித்திருந்த ஒரே பொழுது போக்காகும்.

ஜான் டேவிட் :- அவர் தனியாகத்தான் உலாவுவாரா ?

டேவிட் காட்மன் :- பொழுவாக அவர் தனிமையில்தான் இருந்தாலும் எப்பொழுதாவது எவரையாவது தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்வது உண்டு.


ஜான் டேவிட் :- அவருடைய முதலாவது சிஷ்யர் யார் என்பது தெரியுமா ? அதற்கு ஆதாரமும் உள்ளதா ?

டேவிட் காட்மன் :- அவருடைய இளமைப் பருவத்தில் அவருடன் கூடவே இருந்தவர்கள்தான் அவருடைய முதல் சீடர்கள் என்று வேண்டுமானால் கூறலாம். 1890 ஆம் ஆண்டு முதல் 1915 ஆண்டு அவர் இறந்தவரை அவருடன் கூடவே இருந்து கொண்டிருந்த பழனிஸ்வாமி என்பவர் அதில் மிக முக்கியமானவர். அவர்கள் இருவரும் சுமார் 20 வருடங்கள் ஒன்றாகவே இருந்திருக்கின்றனர்.

ஜான் டேவிட் :- அவரும் பகவானுடன் குகையில் இருந்தாரா ?

டேவிட் காட்மன் :- ஆமாம், அவர்தான் பகவானுக்கு உதவியாளராக விருபக்ஷா குகையிலும், குருமூர்தத்திலும் அவருடன் இருந்திருக்கின்றார்.

ஜான் டேவிட் :- மெல்ல மெல்ல அவரைக் காண வந்தவர்களுக்கு அவரிடம் ஈடுபாடு ஏற்பட்டாலும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


அவர்களுக்கு ஒரு முறையான தீட்சை அளித்து அவர் தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை என நினைக்கலாமா ?

டேவிட் காட்மன் :- அவரைத் தேடி அங்கு வந்தவர்களை நீங்களும் இனி இந்த இடத்திலேயே இரவு பகலாகத் தங்கலாம் என எப்படி முடிவு செய்தார்கள் என்பது குறித்து என்னால் கூற முடியவில்லை. அதை எவரும் முறைப்படி நிர்வாகிக்கவில்லை என்று தெரிந்தது.

ஆனால் எவர் வேண்டுமானாலும் அங்கு வந்து பகவானுடன் தங்க அனுமதிக்கபட்டிருந்தனர். பகல் முழுவதும் அவருடன் அமர்ந்திருந்தவர்கள் இரவும் அங்கேயே தங்கினார்கள். உணவு கிடைத்தால் அதை அனைவரும் பகிர்ந்து கொண்டே சாப்பிட்டனர். அங்கு தங்குமாறோ இல்லை அங்கிருந்து சென்று விடுமாறோ எவரிடமும் பகவான் கூறியது இல்லை. அது அவரவர்களுடைய விருப்பம் என்பது போல விட்டு விட்டார்.


ஜான் டேவிட் :- அவர் ஆசிரமத்தின் நடப்புக்களை கண்காணிக்கவில்லை என்றே நான் கருதுவதும் சரியாக இருக்குமா?

டேவிட் காட்மன் :- விருப்பக்ஷா குகையில் அவர் இருந்த பொழுது எந்த செயல்பாடுகளும் பெருமளவில் நடக்கவில்லை. அங்கிருந்த சாதுக்கள் பிட்சை எடுத்து வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் விருப்பம் போல பகவானுடன் சென்று தங்கி இருந்தனர். அவர்களில் சிலர் ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து அதில் கிடைத்த உணவைக் கொண்டு வந்தனர். அவைகள் அனைத்தையும் ஒன்றாக வாங்கி வைத்துக் கொண்ட பகவான் அங்கிருந்தவர்களுக்கு சம பங்காகப் பிரித்துக் கொண்டு வந்தார். அதிகம் பிட்சை கிடைக்கவில்லை எனில் அனைவரும் பட்டினியுடன் இருந்தனர். அங்கு



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

எந்த விதமான சமையல் வேலைகளும் நடைபெறவில்லை. அவருடைய தாயார் அங்கு வந்த பின்னர்தான் அதாவது 1914 ஆம் ஆண்டு முதலதான் சமையல் வேலைத் துவங்கியது. அங்கு தங்கி இருக்க வேண்டும் எனில் அங்குள்ளவர்கள் எதாவது வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயமும் ஏற்பட்டது. மெல்ல மெல்ல அந்த பழக்கம் கட்டாயமாக மாறி அங்கு தங்கி இருக்க வேண்டும் எனில் எதாவது வேலை செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இன்றும் கூட அங்கு தங்குபவர்கள் எதாவது வேலை செய்தே ஆக வேண்டும். சாதுக்களைப் போல ஒன்றும் செய்யாமல் அமர்ந்து கொண்டிருக்க அனுமதிப்பது இல்லை.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


ஜான் டேவிட் :- அந்த நிலைமை அவர் ஸ்கந்தாஷ்ரமத்திற்கு சென்றப் பின்னர்தானே துவங்கியது ?

டேவிட் காட்மன் :- இல்லை. அவர் அங்கு சென்ற பின் ஒரு முறையாக செயல்படத் துவங்கியது என்றே கூற முடியும். ஆனாலும் 1920 ஆம் ஆண்டுவரை அங்கிருந்த சாதுக்களுக்கு பிட்சை எடுத்தால்தான் உணவு கிடைக்கும் என்ற நிலைமை இருந்தது. 1890 ஆம் ஆண்டில் பகவானே கூட பிட்சை எடுத்து இருக்கின்றார். அவர் பிட்சை எடுப்பதை ஊக்குவிக்கவில்லை என்றாலும் அப்படி செய்வது நல்லது என்றே நினைத்து வந்தார். ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து அதில் இருந்து கிடைத்த உணவை உண்ட பின் ஒரு மரத்தடியில் சென்று உறங்கி இரவைக் கழித்தப் பின், மீண்டும் காலையில் எழுந்து வந்து ஒரு வேலையும் செய்யாமல் இருப்பது என்ற நிலையை பகவான் முதலில் கண்டு கொள்ளாமல் இருந்தாலும் அவர் ஆசிரமத்திற்கு சென்றபின் அதை அவரால் கூட உடனடியாக மாற்ற முடியவில்லை.

ஜான் டேவிட் :- அவர் மெல்லிய துணிதான் உடுத்திக்

கொண்டு இருந்தாரா ?

டேவிட் காட்மன் :- முதல் சில மாதங்கள் அவர் நிர்வாணமாகத்தான் இருந்தார். அவர் அங்கு வந்து தங்கிய பொழுது அந்த ஆலயத்தில் ஒரு பெரிய திருவிழா நடை பெற்றது. அதனால் அவரை சில பக்தர்கள் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் ஒரு துணியை அவருக்கு உடுத்தினார்கள். ஏன் எனில் நிர்வாணமாக அவர் அந்த திருவிழாவில் எங்கும் சென்று அமர்ந்தால் அவரை காவல் துறையினர் கைது செய்து விடுவார்கள் என்ற பயமே காரணம். அது முதல் அவர் இடுப்புத் துணி மட்டுமே உடுத்தி வரலானார். அனால் சில நேரங்களில் வேட்டியும் கட்டிக் கொண்டார். அதற்குக் காரணம் குளிர் காலங்களில் அந்த குளிர் தாங்க முடியாமல் இருக்கும். ஆனால் அதற்கு மேலாக அவருக்கு அதிக துணிகள் தேவையாக இருக்கவில்லை.




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

ஜான் டேவிட் :- அந்த ஆசிரமம் எப்பொழுது பிரபலம் அடைந்தது?

டேவிட் காட்மன் :- மலையை விட்டு பகவான் கீழே இறங்கி வந்தது நல்லதாயிற்று. 1922 ஆம் ஆண்டில் அவருடைய தாயார் மறைந்த பொழுது இந்த ஆசிரமம் உள்ள இடத்தில்தான் அவர் புதைக்கப்பட்டார். அது இந்துக்களின் சுடுகாடுடாக இருந்த இடம் என்பதினால் அங்கு புதைக்கப்பட்டார். அதன் பிறகு ஸ்கந்தாஷ்ரமத்தில் ஆறு மாதங்கள் இருந்து கொண்டிருந்த பகவான் மலையை விட்டுக் கீழ் இறங்கி வந்ததும் திரும்ப மேலே போகவே இல்லை. அதற்கான காரணத்தையும் அவர் கடைசிவரை தெரிவிக்கவில்லை. அங்கு மீண்டும் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்படாததினால்தான் தான் அங்கு செல்லவில்லை என்று மட்டுமே கூறினார். அதன் பிறகே இரமணாஷ்ரமம் தோன்றியது.


ஜான் டேவிட் :- ஆக தற்போது ஆசிரமம் உள்ள இடம் இந்துக்களின் சுடுகாடாக இருந்தது அல்லவா ?

டேவிட் காட்மன் :- ஆமாம். அந்த காலத்தில் ஊருக்கு வெளியில் இருந்த அந்த இடம் புதைகாடாகவே இருந்தது. இப்போது இரமணாஷ்ரமம் உள்ள இடம் ஊர் எல்லைக்கு உள்ளே வந்து விட்டதினால் இந்துக்களின் சுடுகாட்டை தற்போது ஊருக்கு வெளியே மாற்றி விட்டனர்.



## பாகம்-3

# தன்னை எஜமானராக அல்ல, ஒரு நண்பராகவே அவர் காட்டிக் கொண்டார்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

பக்கம்- 27

**ஜான் டேவிட் :-** அந்த ஆசிரமத்தைச் சுற்றி உள்ள இடங்களை எப்படி அவர்கள் வாங்கினர் ?

**டேவிட் காட்மன் :-** அவருடைய தாயாருடைய உடலை அடக்கம் செய்த இடம் ஒரு மடத்திற்கு சொந்தமாக இருந்தது. அந்த மடத்தின் உரிமையாளருக்கு பகவான் மீது மிக உயர்ந்த எண்ணம் இருந்தது. ஆகவே அவர் அந்த நிலங்களை பகவானுடைய ஆசிரமத்திற்கு தானமாகத் தந்து விட்டார். அவரும் பகவானுடைய பக்தாராக இருந்தவர்தான்.

**ஜான் டேவிட் :-** முதலில் கட்டப்பட்டது அவருடைய அன்னையின் சமாதி மேல் எழுப்பப்பட்ட ஆலயமா ?

**டேவிட் காட்மன் :-** அதை ஆலயம் என்று கூற முடியாது. 1922 ஆம் ஆண்டில் பகவான் அங்கு இருந்த பொழுது ஒரு அருமையான புகைப்படம் எடுக்கப்பட்டது. அது ஒரு தேங்காய் ஓலையினால் பின்னப்பட்ட குடிசை. பெரும் காற்றடித்தால் பறந்து விடும் அளவில் இருந்தது அது. அவரை அந்த இடத்தில் வந்து பார்த்த பக்தர்கள் அங்கு இரண்டுபேர் கூட தங்க முடியாமல் இருந்ததைக் கண்டனர். மழை காலத்தில் அதன் உள்ளே தண்ணீரும் வந்து கொண்டு இருந்தது. அதுவே முதலில் கட்டப்பட்ட ஆசிரமம்.

**ஜான் டேவிட் :-** எண்பது வருடங்கள் முன்பு கட்டப்பட்ட

பழமையான அந்த இடம் தற்பொழுது மயில்கள் விளையாட, நீரோடை, மரங்கள் என அற்புதமான சூழ்நிலையைத் தோற்றுவித்துக் கொண்டு இருக்கின்றது


டேவிட் காட்மன் :- அந்த இடத்தை சீர்படுத்தியவரிடம் நான் பேசியபொழுது அவர் கூறினார், அதை காடு என்றும் கூற முடியாமல் அங்கு கற்களும் முற்புதற்களும், கள்ளிச் செடியும் நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டு இருந்தது. மண்வளம் அதிகம் இல்லை. பாறைகள் பூமியில் பெருமளவு பதிந்திருந்து மண் வளமே இல்லாமல் செய்திருந்தது. இராமசாமி என்ற ஒரு மனிதர் முதல் ஆறு மாதங்கள் அங்கிருந்த பாறைகளை அகற்றுவதிலேயே கவனம் செலுத்தினார். அவற்றை கடப்பாறைகளின் உதவி கொண்டு பிளந்து கள்ளிச் செடிகளையும் முற் புதர்களையும் அகற்றினார்.

ஜான் டேவிட் :- அந்தக் கட்டிடம் கட்டப்படத் துவங்கிய பொழுது பகவான் தானும் அந்த வேலையில் ஈடுபட்டிருந்தாரா ?


டேவிட் காட்மன் :- அவர் அந்த பனை ஓலையினால் ஆன குடிசை பின்னப்பட்ட பொழுது அங்கிருந்தாரா எனத் தெரியவில்லை. ஆனால் கட்டிடம் எழும்பத் துவங்கியதும் தானே முழு ஈடுபாட்டை கொண்டார். அன்னையின் ஆலயம் கட்டப்பட்ட பொழுது தானே முன்னின்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். அங்குள்ள கற்கள் உருண்டை வடிவில் இருப்பதைக் கவனித்தீர்களா ?

ஜான்டேவிட்:- பார்த்திருக்கலாம்...என நினைக்கின்றேன்.

டேவிட் காட்மன் :- அது மண் கட்டிகளினால் ஆனது. முதலில் களிமண்ணை பிசைந்து கொண்டு அதில் இருந்து பல செங்கல் போன்ற உருவத்தில் கற்களை முதலில் வடிவம் செய்து அவற்றை வெய்யிலில் காய



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



வைப்பார்கள். அது காய்ந்து போனதும் அவற்றை அடுக்கி வைத்தது ஒரு வீடு போல கட்டி அதன் அடியில் உள்ள சிறு நுழை வாசல் போன்ற ககுதி வழியாக நிறை கட்டைகளை அவற்றுக்குள் வைத்து தீ மூட்டி அந்த ஓட்டையை அடைத்து விடுவார்கள். உள்ளே எரியும் நெருப்பினால் மண் செங்கல்கள் - கரிக்கட்டிகள் செய்வது போல - வெந்து கெட்டியாகி விடும். அந்த தீ அடங்க இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆகும் . அதன் இடையே மழை வந்து அவற்றை நனைத்து விட்டால் அரை வேக்காட்டினால் வெந்த செங்கல்கள் அனைத்தும் பாழாகி விடும். அதை கட்டிடம் கட்டப் பயன் படுத்த முடியாது.

1920 ஆம் ஆண்டில் அந்த ஆசிரமத்துக்கு அருகில் சிலர் அப்படி செங்கல் செய்ய முயன்று அது சரியாக வேகாமல் அரை வேக்காட்டுச் செங்கல்களை அங்கேயே தூக்கிப் போட்டுவிட்டுச் சென்று விட்டனர். அதைக் கண்ட பகவான் உபயோகம் இல்லை என எறிந்து விட்டிருந்த செங்கல்கள் அனைத்தையும் ஒரு நாள் இரவு பல மக்களை அந்த செங்கல்கள் கொட்டப்பட்டு இருந்த இடத்தில் இருந்து ஆசிரமம் வரை வரிசையாக நிற்க வைத்து, ஒருவர் கையில் மற்றொருவராக அந்த செங்கல்களை கொடுத்தவண்ணம் இருக்கச் செய்து உபயோகமற்ற அத்தனை செங்கல்களையும் ஆசிரம் வாசலில் அடுக்கி வைத்தார். மறுநாள் அந்த செங்கல்களை ஒரு கொத்தனார் போல வேலை செய்து சமாதியை சுற்றி தானே அவற்றை அடுக்கி வைத்து சுவர் எழுப்பினார். பகவான் அந்த சுவற்றின் உட்புறம் இருந்த அனைத்து வேலைகளையும் தானே செய்தார். ஆலயத்தின் உட்புற வேலைகளை சாதாரணமாக ஒருபிராமணனே செய்ய வேண்டும் என்று நம்பப்பட்டதினால் அதற்கு உட்புற வேலைகளைத் தானே செய்தார்.

அந்த ஒரு கட்டிடத்தை மட்டும் அவர் தானாகவே கட்டினார். அதற்குப் பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களை மற்ற இஞ்சினியர்கள் கட்ட தான் அதை மேற்பார்வை


இடும் பணியை மேற்கொண்டார். தினமும் கட்டிடம் கட்டப்பட்டுக் கொண்டு இருந்த இடத்திற்கு தான் சென்று அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதைக் கண்காணித்து வந்தார்.


**ஜான் டேவிட் :-** அவருக்கு அனாவசியமாக எதையும் வீணாக்குவது பிடிக்காது என்பீர்கள். அதை இன்னும் விளக்கிக் கூறமுடியுமா ?

**டேவிட் காட்மன் :-** ஆசிரமத்திற்கு வரும் அனைத்தும் கடவுள் தந்தது எனறு அவர் நம்பி வந்தார். சமையல் அறையில் கடுகு சிந்தி விட்டால் கூட அதை நகத்தால் மெல்ல எடுத்து ஒரு இடத்தில் வைத்து அதை சமையலில் பயன் படுத்தும்படிக் கூறுவார். அச்சுப் பிரதிகளில் இருக்கும் வெள்ளை இடங்களை கத்தரித்து வைத்துக் கொண்டு நோட்டுப் புத்தகம் போல உபயோகிப்பார். உபயோகம் இல்லை என துாக்கி எறியும் காய்கறிகளுடைய இறுதி பாகங்களைக் கூட அவர் வெட்டி எடுத்து சமையல் செய்வது உண்டு. அவர் கூறுவது உண்டு. “நல்ல வேளை நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஒரு பெண்ணால் என்னைப் போன்ற பழக்கங்களைக் கொண்டு வாழ முடியாது.”

**ஜான் டேவிட் :-** சரீ, கட்டிடம் கட்டப் பட்ட பொழுது நடந்தவற்றைப் பற்றிக் கூறுங்கள். எந்த இடத்தில் கதவு வேண்டும், ஜன்னல் இருக்க வேண்டும் போன்றவற்றை எல்லாம் பகவான்தான் முடிவு செய்தாரா?

**டேவிட் காட்மன் :-** ஆமாம். ஆவர் தான் எங்கு, எவை, எப்படி அமைந்து இருக்க வேண்டும் என தீர்மானித்து அதைக் வாயினால் கூறுவது உண்டு. சில நேரங்களில் அதை ஒரு காகிதத்தில் வரைபடம் போல வரைந்தும் காட்டுவார்.





ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


**பக்கம்- 31**

**ஜான் டேவிட் :-** ஓ, நீங்கள் இப்போது குறிப்பிடும் பகவானுக்கும், நாள் முழுவதும் சமாதியில் அமர்ந்திருந்த பகவானுக்கும் நிறையவே வித்தியாசம் உள்ளதே.

**டேவிட் காட்மன் :-** அவருக்கு நாள் முழுவதும் அறையில் அமர்ந்து கொண்டிருக்கப் பிடிக்காது. அது ஒரு சிறைச் சாலையைப் போல உள்ளது என்று கூறுவார். எதாவது வேலை நிமித்தம் அவர் அந்த அறையை விட்டு வெளியில் சென்று இருக்கும் பொழுது எவராவது வந்து அவரை மீண்டும் உள்ளே அழைப்பார்கள். ஏன் எனில் பகவான் தன்னைக் காண வரும் பக்தர்களுக்கு உள்ளேதான் தரிசனம் தருவார். அப்படி அவர் அழைக்கப்படும் பொழுது நீண்ட பெருமூச்சு விட்டபடி " மக்கள் வந்து விட்டனர். மீண்டும் சிறைச்சாலைக்குள் செல்ல வேண்டும் " என அலுத்துக் கொள்வது உண்டு.

**ஜான் டேவிட் :-** உள்ளே சென்று ஆசனத்தில் அமர்ந்து கொண்டு என்ன செய்வார் ?

**டேவிட் காட்மன் :-** உள்ளே சென்று தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டு ஆன்மீக விழிப்புணர்ச்சி பெறுவது எப்படி என்பதை விளக்கிக் கூறத் துவங்குவார். அவரைப் பொறுத்தவரை அவருக்கு வேலை செய்வது, முக்கியமாக சமையல் செய்வது என்பது மிகவும் பிடிக்கும். அவர் அந்த ஆசிரமத்தின் தலைமை சமையல்காரனாக 15 வருடங்கள் இருந்திருக்கின்றார். விடியற் காலை இரண்டு அல்லது மூன்று மணிக்கு எழுந்து காய் கறிகளை வெட்டி வைத்து விட்டு அதை மற்றவர்கள் எப்படி சமைக்கின்றனர் என மேற்பார்வையிடுவார். 1920 மற்றும் 1930 ஆம் ஆண்டுகளில் அந்த ஆசிரமம் விஸ்தரிக்கப்பட்ட பொழுது அவர் ஒரு இஞ்சினியர் போல அதையும் மேற்பார்வையிட்டார்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

பக்கம்- 32

**ஜான் டேவிட் :-** இப்போது நீங்கள் கூறும் செய்திகளைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றதே. அவரை பற்றி எண்ணிப் பார்க்கையில் ஒரு பீடத்தில், ஜொலித்தபடி அமர்ந்து கொண்டு இருப்பார் எனவும், அவர் வேலைகள் எதுவுமே செய்தது இல்லை என்றே பலரும் நினைக்கின்றனர். ஆனால் நீங்கள் கூறும் செய்திகள் அவரை மிகவும் வித்தியாசமானவராக காட்டுகின்றதே.


**டேவிட் காட்மன் :-** பதினாறு வயதுக்கு மேல் அவர் வெளித் தோற்றத்தில் அதிக மாறுதல் இல்லை. ஆனால் அவருடைய குணங்களில் நிறைய மாறுதல் இருந்தன. சிறு வயதில் அவர் ஒன்றும் செய்தது இல்லை. அமைதியாக எவருடனும் பேசாமல் இருந்தார். ஆனால் அடுத்த முப்பது ஆண்டுகளில் அவர் மிக அதிகமாக பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார். ஆனாலும் அத்தனை வேலைபாட்டுகளுக்கும் இடையேக் கூட தன்னிடம் வருபவர்களில் யார் வந்தனர், அவர் எப்படிப்பட்டவர் என்பதை எல்லாம் சற்றும் மறக்கவில்லை.

**ஜான் டேவிட் :-** நீங்கள் கூறும் செய்திகள் சுவையாக உள்ளது. மறு பக்கத்தில் இருந்துப் பார்க்கும் பொழுது அவரைப் பற்றி கூறப்படும் தவறான ஆன்மீகச் செய்திகளை அது துாக்கி அடிக்கின்றதே

**டேவிட் காட்மன் :-** உண்மையில் தான் ஒரு பீடத்தில் அமர்ந்து கொண்டிருக்க, மற்றவர்கள் தரையில் அமர்ந்து கொண்டு இருக்கும் நிலையை பகவான் விரும்பியதே இல்லை. அவருக்கு மக்களுடன் கலந்திருந்து அவர்களுடன் இணைந்து வேலை செய்வதையே பெரிதும் விரும்பினார். ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல அப்படிப்பட்ட வாழ்க்கையை கடை பிடித்துக் கொண்டு இருப்பது

எளிதாக இருக்கவில்லை.

அவரை ஒரு பீடத்தில் அமர வைத்து மிகவும் அசாதரணமான முறையில் அவருடன் பழகி அவரைக் கடவுள் போல மக்கள் சித்தரித்துக் காட்டத் துவங்க, அவரால் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதே சமயத்தில் ஒரு சிலர் அவரிடம் சாதாரணமாகவும் பழகி வந்துள்ள செய்திகளும் உண்டு. மேஜர் சாத்விக் என்பவருடைய அறைக்கு சென்று அவரிடம் இருந்த பொருட்களை சிறு குழந்தைப் போல வாங்கிப் பார்த்து விட்டு அவருடைய படுக்கையில் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டு இருந்திருக்கின்றார் பகவான். ஆனால் ஒரு முறை பகவான் வருவதைத் தெரிந்து கொண்ட மேஜர் அவர் வந்து அமருவதற்கு வசதியாக ஒரு நாற்காலியை கொண்டு வரச் சொல்லி அங்கு வைத்திருக்க அது முதல் பகவான் அங்கு செல்வதைத் தவிர்த்து விட்டார்.



**ஜான் டேவிட் :-** அப்படி என்றால் அவர் தன்னை ஒரு நண்பராகப் பர்ப்பதையே விரும்பினார் போலும் !

**டேவிட் காட்மன் :-** பகவானைப் பொறுத்தவரை அவர் எந்த விதமான குறிப்பிட்ட எண்ணத்தையும் கொண்டு இருக்கவில்லை. அவரிடம் வந்து பழகுபவர்கள் எப்படி நடக்கின்றனரோ அப்படித்தான் தானும் பழகினார். அவர் தான் ஒரு நண்பனாக, சகோதரனாக, கடவுளாக, தந்தையாக, அவருடைய பக்தர்களுக்கு எப்படி பழகினால் சந்தோஷம் கிடைக்குமோ அப்படியே பழகினார். ஒருமுறை ஒரு பெண்மணி தான் கருவில் சுமந்து கொண்டிருந்தது பகவான் என எண்ணி இருந்தாள். அவளிடம் பகவானைப் போன்ற தோற்றத்தில் ஒரு பொம்மை இருந்தது. தன்னையும் அறியாமல் அதை எடுத்து வைத்துக் கொண்டு பகவான் முன்னிலையிலேயே கொஞ்சிக் கொண்டு இருப்பாள். ஒருமுறை அவளுடைய அன்பு அளவு கடந்துப் போய் அது பொம்மை என்பதையும் புரிந்து கொள்ளாமல்


அதற்கு தாய் பால் கொடுக்கத் துவங்கினாள்.

ஒரு குரு சிஷ்யன் என்ற நிலையில் எவர் ஒருவா தன்னுடன் பழகினரோ அதை பகவான் ஊக்குவித்தார். அதே சமயத்தில் தன்னை மற்றவர்கள் சாதாரண முறையில் பழகுவதையும் விரும்பினார். “ஒருவன் தன்னுடைய குருவின் சிந்தனையுடன் இருந்தால் மட்டும் போதும், அவன் குருவிடம் எப்படி பழகுகின்றான் எனக் கவலை பட வேண்டாம்” என்பார். அதற்கு உதாரணமாக அவர் புராணத்தில் இருந்து இருவருடைய கதைகளை சுட்டிக் காட்டுவார். அவர்கள் கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தாலும் எப்பொழுதும் அவரைப் பற்றி எதாவது நினைத்துக் கொண்டே இருந்ததினால் தானாகவே ஆன்மீக விழிப்புணர்ச்சி பெற்றார்கள். தமிழில் ஒரு வாசகம் உண்டு. ஒருவன் முதலில் வணங்க வேண்டியது அவனுடைய தாய், பின்னர் தந்தை, அடுத்து குரு கடைசியாகக் கடவுள்.

பகவான் தான் எவரிடமும் குரு- சிஷ்யன் என்ற நிலையுடன் பழகிக் கொண்டு இருந்ததில்லை என கூறுவது உண்டு. அவரைப் பொறுத்த மட்டில் அவருக்கு சிஷ்யன் என எவரும் கிடையாது, ஏன் எனில் தன்னை விட்டு எவரையுமே தன்னால் விலக்கி வைக்க முடியாது. தான் - அதாவது ஆத்மா - என்பது மட்டுமே உள்ள எந்த ஒருவனுக்கும் இயற்கையாகவே விழிப்புணர்வு இருப்பதினால் ஆன்மீக விழிப்புணர்ச்சி தேவை இல்லை என நினைத்தவர். ஆனாலும் ஒரு குருவாகவே அவரை வைத்துக் கொண்டு , அவரிடம் நம்பிக்கை கொண்டவர்கள் அவருடைய கருத்துக்களைப் பரப்பிக் கொண்டு இருந்தனர்.

**ஜான் டேவிட் :-** எந்த நிலையில் முழுவீச்சில் கட்டிட வேலையில் பகவான் ஈடுபட்டிருந்தார் ?


**டேவிட் கார்மன்:-** 1930 ஆம் ஆண்டில் தேங்காய் ஓலையினால் அமைக்கப்பட்டிருந்த குடிசை, ஒரு ஆலயமாக மாற்றிக் கட்டப்படத் துவங்கிய பொழுது



அது நடந்தது. 1930-42 ஆம் ஆண்டில் பெரிய கட்டிடம் கட்டும் பணி நடந்து கொண்டு இருந்தது. அதற்குப் பிறகுதான் அவருடைய அன்னைக்கு ஆலயம் கட்டும் பணி நடந்தது. அப்பொழுது அதை அவர் தானே நிர்வாகிக்காமல் கட்டிடம் கட்டும் பணியில் முதிர்ந்த பொறியியல் வல்லுனர்களிடம் அந்த பணியை ஒப்படைத்தார். அந்த கட்டிடத்தின் அமைப்புக் குறித்தும் தன் கருத்தை எவரிடமும் திணிக்கவில்லை.


**ஜான் டேவிட் :-** அந்த பன்னிரண்டு வருடங்களில் ஒரு பீடத்தில் அமர்ந்து கொண்டிராத மனிதராக, பல வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தவராகத்தான் அவரிடம் சென்ற மக்கள் பார்த்திருப்பார்கள் இல்லையா ?

**டேவிட் கார்மன்:-** அவர்கள் அவரைக் காண எந்த சமயத்தில் அங்கு வந்தனர் என்பதைப் பொறுத்தது அது. சாதாரணமாக காலையும் மாலையும் சுமார் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள், பஜனை நேரங்களில் அவர் அந்த பெரிய ஹாலின் உள் அமர்ந்து இருப்பார். காலை முதல் மாலை வரை அவரைக் காணா முடியாத அனைத்து கட்டிடத் தொழிலாளிகளிடமும் அன்றையப் பணியைப் பற்றி மாலையில் அந்த ஹாலில்தான் விவாதிப்பார். இடையிடையே தன்னைப் பார்க்க வரும் பக்தர்களை சந்திக்க அந்த ஹாலுக்கு அவர் வருவதுண்டு. மற்றும் ஆசிரமத்தின் பக்கத்தில் இருந்த பல்லக்கோடு என்ற இடத்திற்கும் சென்று பக்தர்களை சந்தித்து வந்தார். சாப்பாட்டு இடைவேளைக்குப் பிறகு அவை நடந்தன. அதைத் தவிற அவர் சமையல் அறைக்குச் சென்று அங்கு நடக்கும் வேலைகளைப் பார்ப்பதும், பசு மாடத்திற்கு சென்று அதை பார்வையிடுவதும் உண்டு. பெரிய கட்டிட வேலைகள் நடந்து கொண்டு இருந்தால் அந்த வேலையை மேற்பார்வையிடச் செல்வதும் உண்டு. அவை அனைத்தையும் மதியம் மற்றவர்கள் ஓய்வு எடுக்கும்



சமயத்தில் சென்று பார்வையிடுவார்.

கட்டிடம் கட்டும் தொழிலாளிகளைத் தவிற மற்ற தொழிலாளிகளுடைய வேலைகளையும் பார்வையிடுவது உண்டு. ஹாலில் அவருடைய பக்தர்கள் புத்தகங்களை பைண்டிங் செய்து கொண்டு இருக்க, சமையல்காரர்கள் அவரிடம் வந்து என்ன சமையல் செய்யலாம் என்பவற்றைக் குறித்து விவாதிப்பார்கள். ஆனால் அவர் ஆசிரம நிர்வாகத்தில் மட்டும் தலையிடவில்லை. அதை அவருடைய சகோதரரின் பார்வையில் விட்டுவிட்டார் என்றாலும் எப்பொழுதாவது ஏதேனும் குறை இருந்தால் அதை சுட்டிக் காட்டுவதும் உண்டு. 1926 ஆம் ஆண்டில் அருணாசல மலையை சுற்றி மலையடிவாரத்தில் அவர் நடந்து செல்வது உண்டு.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



**ஜான் டேவிட் :-** அவருடன் வேறு எவராவது செல்வதுண்டா ?

**டேவிட் கார்மன்:-** ஆமாம். நிறைய மக்கள் அவருடன் சேர்ந்து கொள்வார்கள். ஊரில் அவரை வரவேற்று தங்களுடைய இல்லத்திற்கு அழைக்க பலரும் காத்திருப்பார்கள். ஆனால் 1890 ஆண்டிற்குப் பிறகு அவர் எவருடைய வீட்டிற்கும் சென்றது இல்லை. ஆசிரமத்தில் யார் இருக்க வேண்டும் என்ற சர்ச்சை தொடரத் துவங்கியதால் 1926 ஆம் ஆண்டு முதல் “நான் அப்படி பயணம் போகவில்லை என்றால் யார் ஆசிரமத்தில் இருப்பது என்ற சர்ச்சை இருக்காது அல்லவா ?” எனக் கூறிவிட்டு அந்த நடை பயணத்தையும் கைவிட்டு விட்டார்.

**ஜான் டேவிட் :-** அவர் மிகவும் சாதாரணமானவர் , இயற்கையை இரசித்தவர் என்று கூறுகின்றீர்களே, அப்படி என்றால் அவர் மற்ற பிராணிகளை (விலங்குகள்) கூட நேசித்தது உண்டா ?

**டேவிட் கார்மன்:-** நிறையவே அவைகளை நேசித்தார்.

அவருக்குப் பூனை என்றால் மிகவும் பிடிக்கும் என்பார்கள். ஆனால் அதற்கு காரணம் தெரியாது. அவருடைய ஆசிரமத்தில் நிறைய மிருகங்கள் இருந்தன. அவர் நாய், குரங்கு மற்றும் அணில்களுடன் மிகவும் இயற்கையாக கொஞ்சிக் கொண்டு இருந்ததைப் பார்த்து இருக்கிறேன்.


ஜான் டேவிட் :- அவைகள் ஆசிரமத்திற்குள் வசித்தனவா ?

டேவிட் கார்மன்:- மிருகங்களுடைய இடமான தரைகளில் மனிதர்கள் அமர்ந்து கொண்டு அவற்றின் அடிப்படை உரிமைகளைப் பறித்துவிட்டனர் என பகவான் கூறுவார். வருபவர்களுக்கு இடம் வேண்டும் என்பதற்காக மிருகங்களை அங்கிருந்து துரத்துவதை அவர் விரும்பியது இல்லை. அப்படி எவராவது செய்யும் பொழுது அவர் அதை எதிர்ப்பது உண்டு.


அவருடைய இருக்கை மீது அணில்கள் தவழ்ந்து ஓடும். அவர் தலைப் பகுதியில் உள்ள இடத்தில் கூடுகளை கட்டும். அவர் உடலெங்கும் ஏறி ஓடித் திரியும். அவர் படுக்கை மீது குஞ்சுகளைப் பொறிக்கும். அவற்றின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததினால் சில சமயங்களில் அவர் அந்த படுக்கையில் அவைகளைப் பார்க்காமல் அமர்ந்தால், அவை அவதிப்பட்டதும் உண்டு.

ஜான் டேவிட் :- அவர் இயற்கையோடு ஒன்றி இருந்ததினால்தான் அப்படிப்பட்ட இயற்கையான சம்பவங்கள் நடந்து இருக்க முடியும் என்பது இதன் மூலம் நன்கு தெரிகின்றது.

டேவிட் கார்மன்:- அவரைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட இயற்கையான நிகழ்வுகள் அவருக்குப் பிடித்து இருந்தது. ஆனால் அவரை சுற்றி இருந்த பலருக்கும் அவை பிடிக்காமல் இருந்தது.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



1940 ஆம் ஆண்டு அன்னையின் ஆலயத்திற்கு எதிரில் அவர் இருந்த அந்த கல் கட்டிடம் கட்டப்பட்டது. காரணம் 1920 ஆம் ஆண்டில் இருந்து அவர் தங்கி இருந்த மற்றொரு அறை வந்த பக்தர்களை உட்கொள்ள முடியாத அளவு சிறியதாக இருந்தது. அதனால் கட்டப்பட்ட புதுக் கட்டிடம் விசாலமாக இருந்தது. ஆனால் அதில் இப்படிப்பட்ட பிராணிகளும் இருந்ததினால் வருபவர்களுக்கும், பிராணிகளுக்கும் இடையூறாக இருந்ததது.

சிலநேரத்தில் பகவானிடம் அந்த இடத்தில் அமருங்கள் என எவராவது வேண்டிக் கொண்டால் அவர் கேட்பதுண்டு " அந்த அணில்கள் எங்கே போகும் ? " அது மட்டும் அல்ல, அந்த இடம் தன்னைப் பார்க்க வரும் ஏழை மக்களுக்கு இடையூறாக இருக்கும் என பகவான் கருதியதுண்டு. அவர் எதைப் பற்றிச் சிந்தித்தாலும் பாதிக்கப்படுபவர் நிலையில் இருந்துதான் சிந்தித்துப் பார்த்தார்.


**ஜான் டேவிட் :-** ஆக அந்த பெரிய இடம் தவறான மனிதருக்காக ஒதுக்கப்பட்டு இருந்ததா?

**டேவிட் கார்மன்:-** ஆமாம், அவருக்கு அது ஏற்புடையதாக இல்லை. அந்த அறையில் அவரைப் போன்ற ஒரு உருவ சிலை செதுக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் இறுதி வர்ணங்கள் கொடுக்கப்பட்டு வந்த பொழுது, அந்த சிலையை என் இருக்கையில் அமர வையுங்கள் என பகவான் கூறினார். ஆனாலும் உட்கார வேறு இடம் இல்லை என்பதினால் மனநிறைவில்லாமல் அவர் அந்த அறைக்கு தன் இருக்கையை மாற்றிக் கொண்டாலும் வெகு நாட்கள் அங்கு தங்கி இருக்கவில்லை.

**ஜான் டேவிட் :-** அவர் இறப்பதற்கு ஒரு வருடம் முன்னர் அது நடந்ததா?



கட்டிட வேலைகளை மேற்பார்வை இடுகின்றார்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



டேவிட் கார்மன்:- 1949 ஆம் ஆண்டில் அவருடைய அன்னைக்கு ஆலயம் திறக்கப்பட்டதும் அவர் அந்த அறைக்குள் தன் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். அந்த வருடம்தான் அவருக்கு கையில் கான்சர் என்ற புற்றுநோய் வந்து கட்டி ஒன்றும் தோன்றியது. அதனால் அவரால் கழிப்பிடம் கூட நடந்து போக முடியாத அளவுக்கு உடல் மோசம் அடைந்தது. ஆகவே அந்த அறையை அவருடைய இருப்பிடமாக மீண்டும் மாற்றி அமைத்து விட்டனர். அதில்தான் தனது இறுதி சில காலத்தைக் கழித்தார்.


ஜான் டேவிட் :- அந்த அறைதான் தற்பொழுதைய சமாதியா ?


டேவிட் கார்மன்:- ஆமாம். 1940 ஆம் ஆண்டில் ஜானகி அம்மாள் என்பவர் பகவானுடைய ஆசிரமத்திற்கு வந்தார். அவள் கழிவிடம் செல்ல இருப்பிடம் தேடிய பொழுது அங்கு பெண்களுக்கென்று தனியாக கழிவறை இல்லை எனத் தெரிந்தது. அதனால் அவர் அதைக் கட்ட ஏற்பாடு செய்ய, அந்த அறையே பின்னர் பகவான் தனது இறுதி காலத்தைக் கழித்த இடமாக மாறியது. 1949 ஆம் ஆண்டு அந்த கழிவரைக்கு அருகில் இருந்த அறையில்தான் பகவான் தங்கி இருந்தார். கழிவறைக்கு செல்லும் பொழுது தன்னுடன் எவரும் துணைக்கு வருவதை அவர் விரும்பவில்லை. அவர் மிகவும் பலவீனமாக இருந்த பொழுதும் கூட அப்படி எவரும் தன்னுடன் வருவதை விரும்பவில்லை.

ஜான் டேவிட் :- அப்படியா ....?

டேவிட் கார்மன்:- அந்த காட்சியைக் காணவே மனதிற்கு வேதனையாக இருந்தது. இரண்டு முட்டிகளும் வீங்கி நடுங்கிக் கொண்டு இருந்தன. அப்படிப்பட்ட பலவீனமான நிலை இருந்த பொழுதும் கூட எவரும் தன்னுடன் கழிவறைக்கு வருவதை பகவான் சிறிதும்

விரும்பவில்லை. புது ஹாலில் அதற்குச் செல்ல கற்படிகள் இருந்தன. அதில் அவர் ஏறிச் செல்ல முயலும் பொழுது பக்தர்கள் கவலையுடன் அதைப் பார்த்துக் கொண்டே தள்ளி நிற்க வேண்டி இருந்தது. பகவானுடைய விருப்பத்தினால் எவரும் அவருக்கு உதவ அனுமதிக்கப்படவில்லை. அந்த படிக் கற்களில் நடப்பது மிகவும் கடினமாக இருந்ததினால் 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அந்த அறையிலேயே சென்று வசிக்கத் துவங்கினார்.





ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



## பாகம் - 4

## நான் யார் ? இன்பம் மற்றும் உலகம் என்பன என்ன ? அது வெளி வந்தது எப்படி மற்றும் மறைந்தது எப்படி போன்ற அனைத்துக் கேள்விகளையும் உள்ளடக்கியதே அந்த நான்.

ஜான் டேவிட் :- அந்த கடினமான நிலையிலும் அவர் மக்களை சந்தித்தாரா ?

டேவிட் கார்மன்:- நாள் ஒன்றுக்கு ஒரு முறை வந்து தன்னை தரிசிக்க மக்களுக்கு அனுமதி தர வேண்டும் அவர் வலியுறுத்தினார். அவர் அதிக நாட்கள் உயிர் பிழைத்து இருக்க மாட்டார் எனத் தெரிந்ததினால் அவரைக் காண வந்த கூட்டம் அதிகம் ஆயிற்று. ஆகவே கடைசிசில மாதங்களில் அவரை தரிசனம் செய்ய நடை பயண தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதாவது அவருடைய அறைக்கு முன்பாக நடந்து கொண்டே இருந்தபடி அவரை நமஸ்கரித்து விட்டுச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஜான் டேவிட் :- சமாதி அடைந்த அன்றும் தரிசனம் தர சம்மதித்திருந்தாரா ?

டேவிட் கார்மன்:- ஆமாம் , தான் சமாதி அடைந்த அன்று காலைக் கூட அவர் தரிசனம் தந்தார்.


ஜான் டேவிட் :- நான் கூட அவர் மரணம் அடைந்த அன்று காலையில் சிலர் அவரை தரிசித்தபடி சென்றதை கண்டேன்.

டேவிட் கார்மன்:- தன்னைக் காண வரும் பக்தர்களுக்கு தடை எதுவும் இருக்கக் கூடாது என அவர் விரும்பியதினால் 1940 ஆண்டில் இருந்து அவருடைய அறை எப்பொழுதும் திறந்தே வைக்கப்பட்டு இருந்தது. வியற்காலை மூன்று மணிக்கு வந்து கூட தரிசனம் செய்யும் நிலையில் அந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. எவர் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் , நள்ளிரவு பகல் எனப் பாராமல் அங்கு சென்று அவரிடம் தங்களுடைய குறைகளைக் கூறலாம் என்ற அளவுக்கு எற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

ஜான் டேவிட் :- அவர் தன்னை மிகவும் சுறுசுறுப்பாக வைத்திருந்த பொழுதும் கூட, அதாவது கறிகாய்களை நறுக்கிக் கொண்டிருந்த பொழுது, கட்டிடக்வேலையில் ஈடுபட்டிருந்த பொழுது போன்ற சமயங்களில் கூட அனைவரையும் சந்தித்து வந்தாரா ?


டேவிட் கார்மன்:- அந்த சமயங்களில் அவரைக் காண நிறைய மக்கள் வரவில்லை. அவர் கறிகாய்களை நறுக்கிக் கொண்டிருந்த பொழுது, கட்டிடக் கலையில் ஈடுபட்டிருந்த பொழுது போன்ற முந்தைய நாட்களைப் பற்றிக் கேட்கின்றீர்கள். அந்த கால கட்டத்தில் தன்னைப் பார்க்க வந்த சில பக்தர்களைக் காண தானே ஹாலுக்கு சென்று விடுவது உண்டு.

அந்த ஆசிரமத்தில் இருந்த அனைவரும் எதாவது ஒரு வேலையை செய்தே ஆக வேண்டும். பசு மாடத்தில், சமையல் அறையில், அலுவலகத்தில் என எந்த ஒரு இடத்திலாவது வேலை செய்ய வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருந்த வேலைகளை அவர்கள் செய்தாக வேண்டி இருந்தது. அதனால் அதை விட்டுவிட்டு காலை வேளைகளில் அங்கிருந்தவர்கள் பகவானுடன் அமர்ந்து கொண்டிருக்க முடியாது. ஆனால் மாலையில் அனைவரும் பகவானுடன் அமர்ந்து பேசிக்




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்





பகவான் அமர்ந்த கல்லினால் செய்யப்பட்ட நாற்காலியும், அவருடைய உருவச் சிலையும்



.


கொண்டு இருப்பார்கள். அப்போது வந்திருக்கும் விருந்தினரும் அவர்களுடன் அங்கு வரும் பக்தர்களும் திரும்பச் சென்று விடுவார்கள்.

ஜான் டேவிட் :- எவர் வேண்டுமானாலும் பகவானிடம் கேள்விகள் கேட்க முடியுமா ?

டேவிட் கார்மன்:- ஆமாம், இருந்தாலும் அவரை நெருங்கிப் பேச பயந்து கொண்டு இருந்தவர்கள்தான் அதிகம். சில நேரத்தில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதில் தருவதும், சில நேரங்களில் அவர்கள் எதுவும் கேட்காமலேயே அவரே பேசுவதும் உண்டு. தான் பல்வேறு கால கட்டங்களில் பெற்ற அனுபவங்கள், மற்றும் மகான்களுடைய வாழ்க்கை வரலாற்றுக் கதைகள் போன்றவற்றைக் கூறுவார். அவர் அற்புதமாகக் கதைகள் கூறியது மட்டும் அல்ல அந்த கதாபாத்திரங்கள் போலவே நடித்தபடியே கதைகளைக் கூறுவார். அந்த கதையில் வரும் பாத்திரங்கள் துயறுற்று அழும் காட்சிகளில் அவர்கள் அழுவது போலவே தானும் உணர்ச்சி வசப்பட்டு அழுதும் காட்டுவார்.


ஜான் டேவிட் :- இதை எல்லாம் கேட்கையில் அவர் அதிகம் பேசமாட்டார் எனக் கூறுப்பட்டு வந்தது தவறான செய்தி என்பது புரிகின்றது அல்லவா ?

டேவிட் கார்மன்:- அவர் முடிந்த அளவு மௌனம்தான் சாதித்தார். தான் பேசாமல் இருப்பதை அவர் விரும்பினாலும் சில நேரங்களில் மணிக்கணக்காக அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டும் இருந்ததும் உண்டு. அவரிடம் வந்து கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது இல்லை. சில சமயம் அர்த்தமற்ற கேள்விகளுக்கு விடைத் தருவது தேவையற்ற ஒன்று என அவற்றைத் தவிர்த்து விடுவார். கேள்வியே காதில் விழாதது போல ஜன்னலுக்கு



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

வெளியில் எங்கேயோ பார்த்தபடி அமர்ந்து இருப்பது உண்டு. சில கேள்விகளுக்கோ உடனடியாக பட்டென பதில் கிடைக்கும். அது லாட்டரி சீட்டுப் போல ஒரு சிலருக்கு அந்த அதிருஷ்டம் கிடைப்பது உண்டு. தன் எதிரில் வந்து நிற்பவர்களின் மனதில் உள்ளதை அவர் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தார். அதனால்தான் எவருக்கு பதில் தர வேண்டும் என அவர் நினைத்தாரோ அவர்களுக்கு மட்டும் பதிலைத் தந்தார். பலரும் பல கேள்விகள் கேட்டாலும் , பதில் கிடைக்காமல் இருந்தாலும் சற்று நேரத்தில் அவர்களுடைய மனதில் ஒரு வித நிம்மதியும், அமைதியும் ஏற்பட்டு விடுவதைக் கண்டனர். அதுதான் பகவானுடைய செயல். மௌனமாக இருந்தபடியே ஒருவருக்குத் தேவையான மன நிம்மதியை அவர்களுக்குப் பதில் தராமலேயே கொடுத்து வந்தார்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

**ஜான் டேவிட் :-** அவர் மக்களுக்கு அறிவுறைகள் தரத் துவங்கியது எப்பொழுது? அவர் மலைக் குகையில் இருந்த பொழுது அவரிடம் சென்று உங்களுடைய அறிவுறை என்ன என்று கேட்டால் அவர்களுக்கு ஒரு காகிதத்தில் எதாவது எழுதிக் கொடுப்பது உண்டு என நான் கேள்விப்பட்டது உண்மையா ? அது குறித்து விளக்க முடியுமா ?

**டேவிட் கார்மன்:-** 1901 ஆம் ஆண்டில் நடந்த சம்பவம் இது. சிவப்பிரகாசம் பிள்ளை என்பவர் பகவானிடம் ஒரு முறை வந்து நான் யார், என்றும் தான் யார் என்பதை எப்படிக் கண்டு பிடித்துக் கொள்வது எனக் கேட்டதற்கு அவர் வாயினால் பதில் தரவில்லை. அதற்குக் காரணம் அந்த நேரங்களில் அவரால் சரிவரப் பேச முடியாமல் இருந்ததே. அதனால் அவர் தனது பதிலை வெறும் தரை மணலில் தனது விரல்களினால் எழுதிக் காட்டினார். அவை சுருக்கமாக மற்றும் ஆழமான பதில்களாக அமைந்து இருந்தன. ஆனால் சிவப்பிரகாசம் பிள்ளை அவற்றை உடனடியாக

எழுதி வைத்துக் கொள்ளவில்லை. அடுத்தடுத்து கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்விகளுக்கும், தான் முதலில் தரையில் எழுதிய பதிலை அழித்து விட்டு இன்னொரு பதில் எழுதுவார். இப்படியாக மௌனமாக நடைபெற்ற கேள்வி - பதில்களை பின்னர் ஒரு நாள் சிவப்பிரகாசம் பிள்ளை தனக்கு நினைவு வந்தவரை எழுதி வைத்துக் கொண்டார். சுமார் இருபது வருடங்களுக்குப் பின் பகவானுடைய ஒரு வாழ்கை சரித்திரத்தில் அந்த கேள்வி பதில்களை அனுபந்தமாக இணைத்து வெளியிட்டு இருந்தார்.


1920 ஆம் ஆண்டில் அவற்றில் சிலவற்றை தவிர்த்து விட்டு, அவை அனைத்தையுமே தானாகவே ஒரு கவிதை வடிவத்தில் பகவான் எழுதி வைத்தார். அதுதான் இப்போது “நான் யார்” என்ற தலைப்பில் வெளி வந்துள்ளது. அது இருபது ஆண்டுகள் முன்னர் பகவான் தன்னுடைய விரல்களினால் எழுதிக் காட்டிய பதில்களே.


**ஜான் டேவிட் :-** அது மிகவும் சுருக்கமாக உள்ளதே……

**டேவிட் கார்மன்:-** ஆமாம் தமிழில் சுமார் ஆறு பக்கங்களுக்கு இருந்தது.

**ஜான் டேவிட் :-** நான் யார் என்பதுதான் முக்கியமான தலைப்புக் கேள்வி அல்லவா ?

**டேவிட் கார்மன்:-** ஆமாம், நான் யார் என்பதே முக்கியத் தலைப்பு. ஆனால் அதில் பல விஷயங்கள் அடங்கி இருந்தன. அவை அனைத்துமே பொதுவான மன மகிழ்ச்சி, உலகம் என்பது என்ன, அது எப்படித் தோன்றியது, எப்படி மறைந்தது போன்றவற்றை உள்ளடக்கித் தந்த பதில்கள். அது ஒரு ஆத்ம சிந்தனையை வெளிக்காட்டிய பதில்.





ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்




ஜான் டேவிட் :- நான் பல வருடங்களாக சுய சிந்தனையைப் படித்து வந்தும் அதில் உள்ள விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே நீங்கள் அது பற்றி விளக்க முடியுமா ? காலை வேளையில் அவற்றை ஒரு பயிற்சி போல செய்ய வேண்டுமா ? அதைதான் நீங்களும் செய்கின்றீர்களா?, அது மூச்சுப் பயிற்சி செய்வது போன்றதா ?

டேவிட் கார்மன்:- பாப்பாஜி என்பவர் கூறுவார் “ ஒருமுறை செய்தாலும் ஒழுங்காகச் செய்ய வேண்டும். அதுவே சிறந்தது.” எனக்கு தெரிந்து இரண்டு அல்லது மூன்று பேர்களே அப்படி செய்து தனக்குள் நேரடியான விழிப்புணர்வு பெற்றிருக்கின்றனர். அவர்கள் அதற்குத் தயாராக இருந்திருந்ததினால்தான் அப்படி கேள்வியைக் கேட்டு சரியான பதிலையும் சரியான அனுபவத்தையும் பெற்றிருந்தனர்.

ஜான் டேவிட் :- பாப்பாஜியைப் போலவா ?

டேவிட் கார்மன்:- பாப்பாஜி தனக்குத்தானே ஆத்மார்த்தமாக கேள்விகளை கேட்பது என்ற கலையை தீவீரமாகக் கடை பிடித்ததும் அல்லாமல் மற்றவர்களுக்கும் அதை போதனை செய்தார்.

1940 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பகவானிடம் வந்த இரண்டு அற்புதமான மனிதர்களை நான் அறிவேன். அதில் ஒருவள் அவளுக்குப் பிடித்தமான முருகக் கடவுளுடைய தீவீர பக்தை. அவளுக்கு ஆத்ம போதனை என்றால் என்ன என்று தெரியாது. 1950 ஆம் ஆண்டு அவள் பகவான் முன் சென்று நின்ற பொழுது அவளுக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர் முன் சென்று நின்ற பொழுது நான் யார் என்ற கேள்வி அவளுக்குள் தானாக எழுந்தது. அதன் விளைவாக அவள் ஆத்ம ஞானம் பெற்றாள். அது குறித்துப் பின்னர் ஒருமுறைக் கூறியவள் வாழ்க்கையில் முதன் முதலாக பிரும்மன் என்பது என்ன என்பதை தான்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



நேரடியாக அனுபவித்ததாகக் கூறி மகிழ்ந்தாள்.

இரண்டாவது நபர் இலஷ்மண ரெட்டி என்பவர். அவர் பகவானிடம் பக்தராக சில நாட்களுக்கு முன்புதான் வந்து இருந்தார். அவரும் அதற்கு முன்பு எந்த விதமான சுய அனுபவமும் பெற்றது இல்லை. பகவானுடைய நாமத்தை உச்சரித்தபடி அமர்ந்து கொண்டு இருந்தார். திடீர் என ஒரு நாள் நான் யார் என்ற கேள்வி உள்ளத்தில் எழுந்தது. அவருடைய அந்த கேள்விகளுக்கான விடைகளும் தன்னுள்ளேயே கிடைத்தன.

அந்த இருவருக்கும், பகவான் முன்னிலையில் நின்ற சற்று நேரத்திலேயே உள் எழும்பிய கேள்விகளுக்கான விடைகள் தாமாகவே கிடைத்தன. அதன் பின் அப்படி ஒரு நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டதே இல்லை. அந்த இருவருக்குமே அப்படிப்பட்ட அனுபவம் தானாகவே ஏற்பட்டது. அவர்களுடைய தனித்தன்மை அன்றோடு அழிந்தது. ஆக கேள்வி கேட்பது என்பதை விட அவர் முன்னால் சென்று நின்றதே போதுமானதாக இருந்தது.

அவர்களைப் போல் மற்றும் பலரும் அப்படிப்பட்ட கேள்வியை எத்தனை முறை எழுப்பியும் அவர்களுக்கு தக்க பதில் கிடைக்கவில்லை. ஆனால் அந்த இரண்டு பக்தர்களுக்கும் அப்படிப்பட்ட அனுபவம் பகவானுடைய கடைசி கால கட்டத்தில்தான் கிடைத்தன. ஆகவே பகவானுடைய சரீரம் மெல்ல மெல்ல நலிந்து வந்த பொழுதும் கூட அவரிடம் இருந்த ஆன்மீக சக்தி சற்றும் குறையாமலேதான் இருந்தது.

ஜான் டேவிட் :- நீங்கள் கூறுவதைப் பார்த்தால் ஆத்மஞானம் பெற நாள் முழுவதும், மணிக்கணக்கில், பயிற்சி செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை போலத் தெரிகின்றதே.

டேவிட் கார்மன்:- அப்படி செய்வதை பலருக்கும் கையாண்டு உள்ளனர். பகவானே கூட அப்படி

செய்வதை ஊக்குவித்து இருக்கின்றார். அப்படி செய்வதின் மூலம் நிச்சயமாக ஆத்மஞானம் கிடைக்கும் என்பார்.


ஆனால் அதை அவர் போதனையாகச் செய்யவில்லை. அவரிடம் வரும் பக்தர்கள் ஆன்மீக அறிவுறைக் கேட்கும் பொழுது அவர்கள் அதுவரை என்ன செய்து கொண்டு இருந்தனர் என்று கேட்பார். அவர்கள் என்ன செய்கின்றோம் எனக் கூறியதும் அதுவே சிறந்தது எனவும் அதையே தொடர்ந்து செய்யும்படிக் கூறிவிடுவார்.

அவரைப் பொறுத்தவரை சுயபரிசோதனை செய்து கொள்வதை முக்கியமாக போதிக்காமல் இருந்தாலும் என்றாவது ஒருநாள் ஒவ்ஒருவரும் ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துவது உண்டு. அதன் மூலமே தான் என்ற மமதையை அழிக்க முடியும் என்பார். தன்னிடம் வரும் பக்தர்கள் பகவானுடைய எந்த நாமத்தையாவது உச்சரித்துக் கொண்டுஇருக்கும் நிலையையே விரும்புவார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவர்களுடைய வழியிலேயே சென்று அவர்களுக்கு போதனை செய்வார்.

ஆனால் சிலர் அவரிடம் வந்து தாங்கள் அதுவரை எதையுமே செய்யவில்லை எனவும் ஆகவே தாம் ஆன்மீக விழிப்புணர்வு பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும் பொழுது அவர்களை ஆத்ம பரிசோதனை செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துவார்.

**ஜான் டேவிட் :-** அவர் அப்படியாக எதையாவது கூறி அதுதான் அந்த நிலைக்குச் செல்ல சிறந்த வழி என்று கூறி இருக்கின்றாரா ?

**டேவிட் கார்மன்:-** ஆமாம், அப்படி அவர் பலமுறைக் கூறி உள்ளார். ஆனால் எப்படி செய்ய வேண்டும் என எவரையும் நிர்பந்தம் செய்யவில்லை. அவர்களுக்கு அந்த எண்ணம் தோன்றும் பொழுது தன்னிடம் வரட்டும் எனக் கூறி விடுவார்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


**ஜான் டேவிட் :-** தன்னிடம் வருபவர்கள் எந்த முறையைக் கையாண்டாலும் முடிவாக அது உள்ளுக்குள் உள்ள ஆத்மவே என்பதைதான் அவர் நம்பினாரா ?

**டேவிட் கார்மன்:-** ஆமாம். அதை அடையும்வரை தொடர்ந்து சிலவற்றைக் கடை பிடிக்க வேண்டும் என்றே நினைத்து இருந்தார். கால்களை மடக்கிக் கொண்டு கொண்டு அமர்ந்து இருக்க வேண்டும் என்பதல்ல அது. ஒருவர் விழித்துக் கொண்டு இருக்கும் பொழுதே கூட அதை செய்ய முடியும். ஆனால் முதலில் அந்த முயற்சியில் இறங்குபவர்கள் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டு பயிற்சியை துவங்க வேண்டும். ஆனால் மற்றவர்கள் அதை தாங்கள் எந்த வேலை செய்து கொண்டு இருந்தாலும் இடையிடையே கூட செய்யலாம் என்றார்.

**ஜான் டேவிட் :-** ஆத்ம பரிசோதனை செய்து கொள்ளும் பொழுது ஒவ்ஒரு கணத்திலும் மனதில் என்ன நடந்து கொண்டு இருக்கின்றது என்பது புரியுமா?

**டேவிட் கார்மன்:-** இல்லை. ஒருவருடைய மனதிலும் என்ன இருக்கின்றது என்பது அவர்களுக்கே தெரியாது. நான் யார் என்பதை புரிந்து கொள்ள உதவுவதே அதன் நோக்கம். அதாவது தன்னைப் பற்றி தானே பரிசோதனை செய்து கொள்வது.

உதாரணமாக நீங்கள் காலையின் என்ன சிற்றுண்டி சாப்பிட்டீர்கள் என நினைத்துக் கொண்டோ அல்லது வெளியில் ஒரு மரத்தை நோக்கியவண்ணமோ அமர்ந்து கொண்டு இருக்கலாம். ஆனால் அந்த எண்ணங்கள் எதுவும் ஆத்ம பரிசோதனையின் பொழுது உங்களுக்கு ஏற்படாது. உங்கள் எண்ணத்தை *எவன்* சிந்திக்க முடியுமோ, *எந்த* சிந்தித்த கேள்விகளுக்கு விடை தருபவனோ *அவன்* மீதும் மட்டுமே வைத்திருக்க



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


வேண்டும். அந்த *எவன்* மற்றும் *அவன்* என்ற அனைத்தும் யார்? ஒருவனுக்குள் இருக்கும் நான் எனற ஆத்மாவே அந்த இருவரும். பகவான் அதனால்தான் அறிவுறுத்துகிறார் நான் என்ற உன்னுள் உள்ளதில் உன் கவனத்தை செலுத்து. உனக்கு விடை கிடைக்கும்.

அந்த நான் என்பதை நோக்கி, *நான்* என்பது *யார்* என்றும், எங்கிருந்து வந்தது அந்த *நான்* என்பது என்றும் மனதில் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தால் தன்னால் விடை கிடைக்கும். அதை விடுத்து நீங்களே அதற்கு எதாவது பதிலைக் கூறிக் கொண்டு இருக்க முயலக் கூடாது. பதில் உள்ளுக்குள் இருந்து ஆத்மார்த்தமாக உணரப்பட வேண்டும்.


**ஜான் டேவிட் :-** நீங்கள் கூறியது கேட்பதற்கு எளிமையாக உள்ளது. ஆனால் நடை முறையில் செய்ய முடியாதது அது. கேட்பதற்கு சுலபமாக இருந்தாலும் அந்த நிலையை அடையவே முடியாத ஒரு வழிமுறையாகதான் அது இருக்கின்றது என்பதை என் அனுபவத்தினால் கூற விரும்புகின்றேன்.

**டேவிட் கார்மன்:-** ஆமாம், அதை அடைவது அத்தனை சுலபம் அல்ல. திடமான மனநிலையும் கடுமையான பயிற்சியும் தேவை. அந்த பழுக்கத்தை மெல்லத் செய்யத் துவங்கி விட்டால் அது தானாகவே அலை பாயும் மனநிலைகளைத் நிலைப்படுத்தி என்ன நோக்கத்தில் அதை செய்ய நினைக்கின்றீர்களோ அதனருகில் உங்களை கொண்டு சென்று விடும். அந்த நேரத்தில் இருந்து உங்களுடைய மனதில் அமைதியும் கட்டுப்படுத்தப்பட்ட மனநிலையும் தோன்றத் துவங்கும். அதன் பிறகு அந்த பரிசோதனையை தொடர்ந்து கொண்டு இருக்கலாம்.

பகவான் அதற்கும் ஒரு உவமையைக் கூறுவார். உங்களிடம் ஒரு காளை மாடு இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அதை தொழுவத்தில் கட்டி



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



வைத்துள்ளீர்கள். கதவைத் திறந்து விட்டால் பாய்ந்தோடிக் கொண்டு அது வெளியில் சென்று உணவு தேடத் துவங்கும். உணவு தேடத் துவங்கும் அது பயிரிடப்பட்டுள்ள விளை நிவலங்களிலும் சென்று பயிர்களை சாப்பிடத் துவங்க அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் அதை தடியாலும் கம்புகளாலும் அடித்து விரட்டுவார்கள். ஆனாலும் அந்த அடிகளைப் பொறுத்துக் கொண்டு அது மீண்டும் மீண்டும் பயிர்களை தின்பதற்கு முயலும். காரணம் அதற்கு எல்லைகள், வரை முறைகள் எல்லாம் என்ன என்பது தெரியாது. அதனுடைய வாழ்வே உணவைத் தேடி அலைவதும், எங்கெல்லாம் உணவு கிடைக்குமோ அங்கு சென்று உணவை உண்பதும்தான்.

அந்த காளைப் போன்றதுதான் மனதும். இருதயம் என்பது மாட்டுத் தொழுவம் போன்றது. உலகில் உள்ள சுகபோகங்களையும் அது தேடி அலைவது அதனால்தான்.

பகவான் கூறுவார் அந்த காளையை அடக்குவது போல மனதை கட்டாயப்படுத்தி தடை போடுவது பலன் தருவதில்லை. அதனால்தான் முதலில் தற்காலிகமாக மனதை நிலைப் படுத்த ஜெபம் மற்றும் தியானம் செய்யத் துவங்கி கட்டுப்படுத்த வேண்டும். அதை தொடர்ந்து செய்யாமல் விட்டுவிட்டால் மனம் மீண்டும் அலை பாயத் துவங்கி விடும். அது தேவையற்ற பழக்க வழக்கங்களில் சிக்கி மீண்டும் பரிதவிக்கும். நீங்கள் காளை மாட்டை கட்டி வைத்தால் அதை அது விரும்பாது. சமயம் பார்த்துக் கொண்டே திடீர் என உங்கள் மீது பாய ஓடிவரும். அது போலத்தான் கட்டி வைக்கப்பட்ட மனதும் கோபத்தில் இருக்கும்.


ஆத்ம சோதனை என்பதை எப்படி செயது பார்க்க வேண்டும் என பகவான் விளக்குவார். ஒரு தொழுவத்தில் நிறைய புற்களை போட்டு வைத்து, மாட்டை கட்டிப் போடாமல் அங்கு போடப்பட்டு உள்ள புற்களை சாப்பிட அனுமதித்து விட்டு, கதவை திறந்து வைத்திருந்தாலும் , அதன் இயற்கை குணம்

மறையாமல் அது மீண்டும் வெளியில் சென்று போகக் கூடாத இடத்தில் எல்லாம் சென்று அங்கு உள்ள புற்களை மேயத் துவங்கும். அங்குள்ளவர்களிடம் அடியும் வாங்கும். அதே சமயம் ஒரு கட்டுப் புல்லை காளை மாட்டின் முகத்தெதிரே காட்டிய வண்ணம் அதைக் கட்டிப் போட இருக்கும் இடம் வரை சென்றால், அதுவும் அந்த உணவை சாப்பிடும் ஆசையில் உங்களுடன் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். இப்படியே தினம் தினம் அந்த காளையை அழைத்து புல் உள்ள இடத்திற்கு அழைத்துச் சென்றால் அது மெல்ல மெல்ல இங்கேயே நமக்கு நிறைய உணவு கிடைக்கின்றதே என்ற நினைப்பில் வெளியே செல்வதைத் தவிர்த்து விடும்.

அதுபோல உன்னுடைய மனது அலை பாயும் பொழுது அதை இதயத்திற்குள் மீண்டும் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும். அந்த இடத்தில் கிடைக்கும் மன அமைதியை மெல்ல மெல்ல அதுவும் உணரத் துவங்கியதும் அந்த மனதும் அலை பாயும் நிலையைத் துறந்து அங்கேயே இருக்கத் துவங்கி விடும். அப்படித்தான் யோகிகள் தங்களுடைய மனதை அடக்கிக் கொள்வதுண்டு. அது போலவேதான் நாமும் செய்ய வேண்டும்.

ஜான் டேவிட் :- வீட்டிலேயே தின்பதற்கு நிறைய புல் இருக்கின்றது எனப் புரிந்து விட்டதினால்தான் வெளியே இனி போக வேண்டாம் என தோன்றும் நிலையைதான் விழிப்புணர்வு என்று கூறலாமா ?

டேவிட் கார்மன்:- இல்லை, அதை புரிந்து கொள்ளும் நிலை என்று மட்டுமே நான் கூறுவேன்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

## பாகம்-5


## அவருடைய பதில் அனைத்துமே உங்கள் இதயத்திற்குள்ளேயே உங்களை அழைத்துச் சென்று அங்கு உள்ள ஆன்மீக வெளிச்சத்தை உணரும்படிச் செய்வதுதான்

**ஜான் டேவிட்:-** ஆமாம், வீட்டிற்குள்யே உண்பதற்கு நிறைய புல் இருக்கின்றது எனப் புரிந்து விட்டதினால்தான், அதை புரிந்து கொள்ளும் நிலை என்று நினைக்க வேணடியது.......

**டேவிட் கார்மன்:-** தன்னை உணர்ந்து கொள்ளும் நிலைக்கு முன் தனக்குள் இருக்கும் நான் என்ற அகந்தையை ஒழிக்க வேண்டும். இப்போது பகவான் கூறிய உவமையைக் கூறுகிறேன். அதை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். பகவான் கூறிய உவமைகளுடன் அவருடைய அறிவுறைகளும் கலந்தது இது.

முழு அளவிலான விழிப்புணர்ச்சி பெற வேண்டும் எனில் உங்களுக்குள் உள்ள அந்த காளை மாடு முதலில் மடிய வேண்டும். அது உயிருடன் இருந்து, கதவுகளும் திறந்து இருந்தால் மீண்டும் எப்பொழுது வேண்டுமானால் ஓடிப் போக அதற்கு வழி கிடைத்து விடும். ஆனால் அது இறந்து விட்டால் அந்த நிலைமை ஏற்படவே ஏற்படாது. ஆக விழிப்புணர்வு பெற வேண்டும் எனில் முதலில் மனதும் மரணம் அடைய வேண்டும். அந்த நிலைமையில் மனதில் அமைதியைத் தவிற வேறு எதுவுமே இருக்காது.

அந்த அலை பாய்ந்த மனது இருதயத்திற்குள் சென்று அடைக்கலம் ஆகிவிடும் பொழுது *தான்* என்பது அழிந்து போகின்றது. *தான்* என்ற அது மனதைக்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


கட்டுப்படுத்தி மனதை மீண்டும் வெளியில் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி விடும். அலை பாயும் உணர்வுகள் மறைமுகமாக தோன்றினாலும் ஒரு தடவை மனம் சக்தி பெற்றுவிட்டால் அது அந்த அலை பாயும் எண்ணங்களை முற்றிலுமாக தன்னிடம் இருந்து அழித்து விடும்.

இதுதான் பகவானுடைய வழிமுறை. கட்டாயப்படுத்தி செய்யப்படும் எந்த செயலுமே நிலையாக இருக்காது. உன் மனதைக் கட்டுப்படுத்தி பல வருடங்கள் வைத்திருக்க முடியும். அந்த மனதை தான் என்ற உணர்வு கட்டுப்படுத்த முடியாது. ஏன் எனில் அந்த தான் என்பதில் உணர்ச்சிகள், ஆசைகள் என அனைத்தும் அடங்கி உள்ளன. அவைகள் மனதை மீறி வெளி வர முடியாது. ஆக அப்படிப்பட்ட நிலை தோன்றியவுடன் *தான்* என்பது மனதை ஆசையற்றதாக மாற்றிவிடும். மனது தானாக அழிய முடியாது, ஆனால் தான் என்ற உணர்வில் அதுவும் கரைந்து விடும்.

தான் எனபதுதான் முடிவாக ஆசையில்லா மனதை உருவாக்குகின்றது. மனது தானாக அழிய முடியாது. ஆனால் நான் என்பதில் கலந்து மறைந்து விடும். பயிற்சி மூலம், தொடர்ந்து ஆத்மார்த்தமாக கேள்விகள் எழுப்பிக் கொண்டே இருந்தால் பட்டற்ற மன நிலையை அடையலாம். மனது தானாக எதையும் செய்ய முடியாது.

ஜான் டேவிட்:- ஆக ஆத்ம ஞானம் பெற்று விட்டால் மனது தானாக அழிந்து விடும். அப்படித்தான் மற்ற சராசரி மனிதர்ளைப் போலவேதான் ஆத்ம ஞானம் பெற்றவர்களும் வாழ்ந்து வந்தாலும் தங்களுடைய மன உணர்ச்சிகளை மட்டும் அடக்கி வைத்துக் கொள்கின்றனர். மனதிலே ஒன்றுமே நினைக்காமல் உணர்ச்சியற்ற ஜடம் போல இருந்தால் இறந்தவனுக்கு சமமாகிவிடும்.

டேவிட் கார்மன்:- இது ஒரு தவறான கருத்தாகும். மனது வேலை செய்யாவிடில் எப்படி ஒன்றை செய்ய முடியும்,




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

நிகைக்க முடியும், பெச முடியும். இவை எல்லாம் உன் மனதிற்கேற்ப நீ செய்கிறாய். ஒரு துறவி கூட சராசரி மனிதர் செய்வது போலவே அனைத்தையும் செய்கின்றார். காரணம் அவர் ஐம்புலன்களையும் அடக்கி மனது என்ற ஒரு மார்கத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

நீ சரீரத்துடன் உலவும் ஒரு மனிதன். ஒரு யோகியை நோக்கும் பொழுது அவரும்மானிட உருவில் இருப்பதினால் அவரும் உன்னைப் போலவே இயங்குகின்றார் என நினைப்பாய். ஆனால் அந்த தறவி அப்படி நினைப்பது இல்லை. அவருக்குத் தெரியும் தன்னுடைய சரீரம் வெளிப்படுத்தும் அனைத்தும் தனக்குள் உள்ள ஆத்மாவே இயக்குகின்றது. அதை அவர் தவறுதலாகக் கூட தன் மனம் இயக்குகின்றது என எண்ணுவதில்லை. அந்த உடலை இயக்குவது அந்த புனிதமான ஆத்மாவே.

எண்ண அலைகளினால் நிறம்பிய மனது அழிய, அது இயக்கும் அனைத்தும் அழிந்து போகின்றது. முடிவில் இருப்பது தான் என்ற ஞான நிலைதான். அது சரீரம் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய வைக்கின்றது. அந்த நிலையில்தான் சரியான செயல்களையும், சரியான வார்த்தைகளையும் உபயோகிப்பது என்பவை நடைபெறுகின்றன. ஏன் எனில் அவற்றை செய்யத் துாண்டுவது நான் என்ற ஞானம் மட்டுமே.

பகவான் ஒருமுறை தன்னை ஒரு ரேடியோவுடன் இணைத்துப் பேசினார். அதில் இருந்து வரும் சப்தம் என்ற வார்த்தைகள் நல்லவற்றை, மற்றும் பல்வேறு எண்ணங்களை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கும். ஆனால் அதைப் பிரித்துப் பார்த்தால் அதுவரை அதில் இருந்து வெளி வந்து கொண்டிருந்த எண்ணங்களோ, வார்த்தைகளோ கண்களுக்குப் புலப்படாது. அது போல பகவானைப் போன்ற துறவிகள் பேசுவதைக் கேட்டால் அது அவருடைய மனதில் இருந்து வெளி வந்ததாக இருக்காது. மாறாக இருதயத்துக்குள் உள்ள நான் என்ற




ஞானம் வெளிப்படுத்தியதாகவே இருக்கும். பகவான் தான் எழுதியவற்றில் மனோனசா எனக் கூறுவார். அதாவது அந்த நிலை அழிக்கப்பட்டுவிட்ட மனநிலையை குறிக்கும்.

பகவானைப் பொறுத்தவரை மனது என்பதைத் தவறாக புரிந்து கொண்டு இருக்கின்றோம். மூளையில் ஓடும் அனைத்து எண்ண அலைகளையும் இயக்குவது நான் என்ற எண்ண அலை. அதாவது ஒரு காரியம் முடிந்ததும் ஒருவர் பல்வேறு விதமாக நினைப்பது உண்டு “ நான் மகிழ்ச்சி அடைகின்றேன், எனக்கு ஒரு பிரச்சனை உள்ளது, நான் அங்கு செடி கொடிகளைப் பார்க்கின்றேன்.” இப்படி பலவிதமாகத் தோன்றும் எண்ணங்களதான் மனம் என நினைப்போம்.


ஆத்ம பரிசோதனை செய்து கொள்ளும் பொழுதுதான் மனது என்பது தனியாக இயங்கும் ஒன்றல்ல என்பது புரியும். மனது எப்படிப்பட்டது என்பது பற்றி பகவான் கூறுகையில் அதை கல்யாண வீடுகளில் வரும் விருந்தினரைப்போல என்பார். கல்யாணங்களில் அழைக்காமலேயே வந்து விட்டவர்களை மணமகனுடைய சொந்தங்கள் என என மணமகள் வீட்டினர் நிதைத்துக் கொண்டு இருக்க, மணமகள் வீட்டினரோ வந்துள்ளவர்கள் மணமகன் விட்டினர் என எண்ணிக் கொள்ள, அவர்கள் உண்மையில் யார் வீட்டுக்காரர்கள் என்பதே இருவருக்கும் தெரியாமல் இருக்கும். அது போல மனதும் சரீரத்தினுடையதோ, இல்லை ஞானத்துடையதோ அல்ல. அது எங்கிருந்து வெளி வருகின்றது என நாம் ஆராய்ச்சி செய்து பார்த்ததும் இல்லை. அதை நாம் ஆராய்ந்து பார்க்கத் துவங்கினால் அது மறைந்தே போய்விடும். பகவான் அது குறித்துக் கூறிய அற்புதமான ஒரு கருத்தை அவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்த ஜீ.வி. சுப்பராமையா என்பவர் எழுதியிருந்தார். அது இதோ:-


பகவானுடைய பதில்கள் ஒரு தனிப்பட்ட ரகத்தைச் சேர்ந்தது. அவர் சாதாரணமாக மௌனமாகவே இருப்பார். அவரை எப்பொழுதாவது வந்து பார்த்துவிட்டுப்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

போகும் பக்தர்கள், பகவான் பேசுவதுண்டா என்று வியக்கும் அளவிற்கு மௌனமாக இருப்பதுண்டு. அவரிடம் மனதில் இருந்து எழும் உண்மையான சந்தேகங்களுக்கு விடை கிடைக்காமல் இருந்தது இல்லை. சில நேரங்களில் அவரிடம் கேட்கப்பட்ட சந்தேகங்களுக்கு மௌனமே பதிலாகக் கூட அமைந்து விடும். கேள்வியைக் கேட்டவர் பொறுமையாக அதன் பதிலைப் பெற காத்திருக்க வேண்டும். அவரிடம் இருந்து நல்ல பதிலைப் பெற மிகச் சுருக்கமான, எளிமையான கேள்விகளை மட்டுமே கேட்க வேண்டும். அதன் பின் அவர் தரப் போகும் பதிலை எதிர் நோக்கிக் காத்து இருக்க வேண்டும். பதில் தருவதற்கு சற்று நேரம் எடுத்துக் கொள்ளும் பகவான் மெல்ல மெல்ல இடைவெளி விட்டவாறே பதிலைத் தருவதுண்டு. அவர் கூறிக் கொண்டே இருக்க சற்று நேரத்தில் அந்த பதில் தீவிரமடையும். அது எப்படி இருக்கும் என்றால் மெல்ல மெல்ல மழைத் தூறத் துவங்கி, பெரும் மழையாக உரு மாறுவதைப் போல இருக்கும். அந்த பதில் சில சமயங்களில் பல மணிநேரம் கூட நீடிக்கும். அந்த நேரத்தில் அவர் முன் அமர்ந்து இருப்பவர்கள் பேச முடியாமல் வாய் அடைத்து அமர்ந்திருப்பர். அவர் கூறி முடிக்கும் வரை நீங்கள் அதில் குறுக்குக் கேள்விகளைக் கேட்காமல் இருக்க வேண்டும். அப்படி அவருடைய பேச்சை குறுக்கீட்டின் மூலம் தடை செய்தால் அவர் மீண்டும் அமைதியாகி விடுவார். பதில் அதற்கு மேல் கிடைக்காது. அது எதனால் என்றால் அவர் யோசனை செய்து கூறியவை மனதில் இருந்து வெளிவந்த பதில்கள் அல்ல. வெளிவரும் அனைத்துமே அவருடைய உள்ளத்தில் இருந்த ஞானத்தில் இருந்து வெளிக் கிளம்பி வந்த வார்த்தைகள்தாம். அவருடைய எந்த பதிலுமே உங்களை ஆத்மார்த்தமாக யோசிக்கும்படியும், ஆத்ம ஞான ஒளியை உணரச் செய்யும் வகையில்தான் இருக்கும். அவர் எவருடனும் எதிர் மறையாக கேள்வி கேட்டு விவாதங்கள் புரிந்தது இல்லை, சர்சைகளும் செய்ததில்லை.





ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



**ஜான் டேவிட்:-** நாம் மீண்டும் அந்த காளை மாட்டு உவமைக்குப் போகலாம். அலைந்து திரியும் காளை மாடு போன்ற அந்த மனம் மடிய வேண்டும். அலை பாயும் மனம் மடிந்து விட்டால் விழிப்புணர்வு வந்து விட்டதென்பதாகாதா ? விழிப்புணர்ச்சி என்பதற்கும், ஞானமடைந்தவர் என்பதற்கும் வேறுபாடு உண்டா ? இவை இரண்டுமே பொதுவான வார்த்தைகள் என்றாலும் அவற்றின் அர்த்தங்கள் வேறுபட்டவையா ?

**டேவிட் காட்மன் :-** நான் என்பது ஒன்றுதான். தன்னைத் தானே உணர்வது என்பதும் ஒன்றுதான். அனுபவங்கள் மனதிற்குத்தானே ஒழிய தனக்கு அல்ல. மனதை எப்பொழுது வேண்டுமானாலும் அடக்கி வைக்கலாம். அது சஹாஜா நிலை அல்ல. அதாவது இயற்கையான நிலையில் உள்ள நேரத்தில், ஒருவருடைய மனம் மேல் எழும்புவது இல்லை. தற்காலிகமாக நடைபெறும் எந்த நிகழ்ச்சிகளுமே மனதிற்கு கிடைக்கும் அனுபவங்கள். பேரானந்தத்தையும், அமைதியையும் *தன்னால்* அதாவது *தான்* என்பதினால் மட்டுமே உணர முடிகின்றது.

உதாரணமாக " நான் இந்த அனுபவத்தைப் பெற்றேன், நான் தியானித்தேன், என் ஞாபகசக்தி" இப்படி அனைத்தும் *என்* என்ற *நானுடன்* பின்னி உள்ளன. அந்த *நான்* என்பது இதயத்திற்குள் சென்று அதனுடன் கலந்துவிட்டால் மீண்டும் எழுந்திருப்பது இல்லை. அங்கு அமைதி, பேரானந்தம் போன்றவை மட்டுமே எழுவதைக் காணலாம்.

அந்த நிலையை ஒரு ஒத்திகை என்று மட்டுமே கூற முடியும். அது விழிப்புணர்வு பெற்ற நிலை அல்ல. நான் என்ற தன்மை இருதயத்திற்குள் சென்று அடைக்கலம் ஆகிவிடும் பொழுது அங்கு பேரானந்தமும், அமைதியும் கிடைக்கின்றது. நான் என்ற உணர்வு மீண்டும் மீண்டும் தலைத் தூக்கும் பொழுது அடுத்த காட்சிக்கு தயாராகின்றோம். அது வரும பொழுதும் போகும் பொழுதும் மனதில் அலை பாயும். ஆகவே நான்



ஸ்ரீ இரமணாஷ்ரமத்திற்கு செல்லும் வழி. வாசலில் உள்ள இலுப்பை மரம் 1922 ஆம் ஆண்டு முதல் உள்ளது.

என்பதை உணராதவரை இவை அனைத்தும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.


ஜான் டேவிட்:- அவை அனைத்தும் ஒத்தகைகள் என்றால் முடிவான விழிப்புணர்சியைப் பெறுவது எப்பொழுது ? அதற்கு ஒருவருடைய அருள் வேண்டுமா ?

டேவிட் காட்மன் :- இதற்கு உதாரணமாக நான் மீண்டும் லஷ்மணஸ்வாமியை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். அவர் பகவானுடைய முன்னிலையில் ஆத்ம சோதனையை மேற்கொண்டவர். அவர் கூறுவதைக் கேட்டால் சரியானவரிடம் இருந்து விடை பெற்றதாக இருக்கும்.

அவரைப் பொறுத்தவரை எந்த ஒருவனும் முயற்சி செய்தால் உணர்வற்ற மன நிலையை அடைய முடியுமும். அந்த நிலையில் சென்ற பின் கூட சில நினைவுகள், ஆசாபாசங்கள் போன்றவைத் தொடர்ந்து தோன்றும். ஆனால் அவை உன்னை மீறி மேல் எழும்ப முடியாது.

லஷ்மணஸ்வாமி கூறுவார் " நீ அந்த நிலைக்கு சென்று விட்டப்பின் ஒரு ஞானியின் முன்னால் சென்று அமர்ந்து தியானிக்க நான் என்ற சக்தி மீண்டும் எழுந்திருக்க முடியாத இடத்திற்கு சென்று அழிந்து விடும். ஆனால் உங்களுடைய ஆசைகளும், அலை பாயும் எண்ணங்களும் மனதிற்குள் ஆழமாக சென்று மறைந்திருந்தால் அந்த நிலையை எட்ட முடியாது. அந்த நேரத்தில்தான் ஒரு குருவின் வேலை தொடங்குகின்றது. உன்னுள் உள்ள அந்த மறைந்திருக்கும் சக்திகளை வெளியே இழுத்து வந்து தன்னுடைய சக்தியினால் அவற்றை அழித்து விடுகின்றார்.

ஆனால் இவைகளை மறைத்து வைத்திருக்கும் ஆசாபாசங்களைக் கொண்டவனை ஒன்றும் செய்ய முடியாது. ஒவ்ஒருவனும் முதலில் தானே ஆத்மார்த்தமாக தன்னை அடக்கிக் கொண்ட பின்தான் குருவிடம் செல்ல வேண்டும் . ஏன் எனிர் குருவால் மறைத்து வைத்திருக்கும் ஆசைகளை வெளியே இழுத்து அழிக்க




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்


முடியாது. நீ தான் அதை முதலில் செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு உன்னுள் இருக்கும் குரு தானாகவே அதை செய்து முடிப்பார்.

**ஜான் டேவிட்:-** நாம் இருவரும் பப்பாஜியிடம் நெருங்கிப் பழகி இருக்கின்றோம். அவர் மக்களைப் பார்த்து உனக்கு வேண்டியது கிடைத்து விட்டது எனறு கூறுவது உண்டு. அவர் அப்படிக் கூறுவது முதல் நிலையையா, இரண்டாவது நிலையையா இல்லை எனில் கடைசி நிலையையையா ?

**டேவிட் காட்மன் :-** என்னைப் பொறுத்தவரை அவர் முதல் நிலையைதான் குறிப்பிட்டு இருக்க வேண்டும். அவருடைய சாதுர்யமே உள்ளே சென்று அமர்ந்து இருக்கும் உன் மனதை வெளியில் இழுத்து விடுவதுதான். அப்போது நீயும் நினைப்பாய் " ஓ நான் ஞானம் பெற்று விட்டேனா ? எத்தனை பாக்கியசாலி நான் இந்த அற்புதத்தை அடைந்து விட " என்று நினைப்பாய். அது அவருடை கை வந்த கலை என்றாலும் அது இயற்கையாகவே அவரிடம் இருந்து வெளிப்பட்டது. அது அவருக்கே தெரியாது. அந்த நேரத்தில் உன் மனதில் நிறைய எண்ணங்கள் ஊறிக் கொண்டு இருக்க, அவர் சட்டென அப்படி கூறும் பொழுது மன எண்ணங்களில் மூழ்கி உள்ள உன்னை வெளியில் இழுத்து விடும். நான் முதலில் கூறினேன் அல்லவா. ஞானம் கிடைக்கும் நிலைக்கு நீ செல்ல வேண்டும் எனில் நீயும் ஒத்துழைத்தால்தான் அது நடக்கும். அப்படி இல்லாமல் உனக்கு சட்டென்று எற்படும் விழிப்புணர்ச்சி தற்காலிகமாகத்தான் இருக்கும். என்றாவது ஒரு நாள் உன் அலை பாயும் மனது அழியத் துவங்கும், அதற்கு பத்து நாட்கள், பத்து மாதங்கள் , இல்லை பல வருடங்கள் கூட ஆகலாம்.

**ஜான் டேவிட்:-** அப்படி என்றால் அந்த முடிவான நிலையை அடைவது மிக மிக அபூர்வம் அல்லவா ?





ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்




டேவிட் காட்மன் :-பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறினாரே ஆயிரத்தில் ஒருவன் மட்டுமே ஆழமாக சிந்திப்பவன். அந்த ஆழமாக சிந்திக்கும் ஆயிரம் மக்களில் ஒருவன் மட்டுமே ஞானம் அடைகின்றான்.

ஜான் டேவிட்:- சமீபத்தில் வெளியான உங்கள் புத்தகங்களில் பகவானுடன் நெருக்கமாக இருந்தவர்களைப் பற்றி எழுதி உள்ளீர்கள். ஆக ஞான நிலையை அடைந்தவர்களைப் பற்றித்தான் நீங்கள் எழுதி இருக்கின்றீர்களா ?


டேவிட் காட்மன் :- இல்லை. அது அப்படி அல்ல. என்னைப் பொறுத்தவரை, ஆங்கிலத்திலும் சரி, தமிழிலும் சரி பகவானுடன் நெருக்கமாக இருந்தவர்கள் பற்றி எந்த செய்தியுமே வெளிவரவில்லை என்பதினால் அவர்களைப் பற்றி எழுதினேன் என்பதைத் தவிற அவர்களுடைய ஆன்மீக சக்தி நிலைப் பற்றி எதுவும் கூறவில்லை.

ஜான் டேவிட்:- அப்படி என்றால் அந்த இறுதி நிலையை அவர்கள் அடைந்து விட்டனர் என நீங்கள் கூறவில்லை அல்லவா ?


டேவிட் காட்மன் :- அவர்களே அது பற்றிக் கூறட்டும். சிவப்பிரகாசம் பிள்ளை என்பவர் ஐம்பது ஆண்டுகளாக பகவானுடன் நெருக்கமாக இருந்து இருக்கின்றார். 1901 ஆம் ஆண்டில் பகவானுடன் நடத்திய விவாதத்தில் அவருக்குத்தான் பகவான் தனது பதில்களை மண்ணில் எழுதிக் காட்டினார்.அவர் பல இடங்களில் கூறி உள்ளார் " நான் எனது வாழ்வை வீணடித்துக் கொண்டு விட்டேன். நான் நாயை விடக் கேவலமானவன். நான் எந்த முன்னேற்றமும் அடையாமல் இத்தனை வருடங்களும் இருந்து விட்டேன் "



குஞ்சுஸ்வாமி



சிவப்பிரகாசம் பிள்ளை



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஜான் டேவிட்:- அந்த நேரத்தில் அவருக்கு அப்படித் தோன்றி இருக்கலாம் அல்லவா ?

டேவிட் காட்மன் :- தினமும் ஒரு தமிழ் பாடலைக் குறித்து பகவான் சர்ச்சை செய்து விளக்கவுறை தருவது உண்டு. அதில் சிவப்பிரகாசம் பிள்ளையின் தமிழ் பாடல்களும் எடுத்துக் கொள்ளப்பட்டது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அவருடைய பக்தர்கள் பகவான் முன்னால் அமர்ந்து கொண்டு குரல் எழுப்புவது உண்டு " நான் நாயைவிடக் கேவலமானவன் "

பகவானிடம் ஒரு முறை ஒருவர் கேட்டார். ஐம்பது வருடங்கள் உங்கள் அருகிலேயே இருந்த இவருக்கே இந்த கதி என்றால் எங்களுடைய நிலைமை என்ன ஆவது ?

பகவான் கூறுவார் “ அப்படி தன்னை நொந்து கொண்டு கூறுவது என்னைப் பற்றி அவர் பெருமையாக இருக்கவே ” சிவப்பிரகாசம் மறைந்துவிட்ட பொழுது பகவான் கூறினார் ” சிவனுடைய ஒளியாக சிவப்பிரகாசம் மாறிவிட்டார் ”

ஜான் டேவிட்:- அப்படி என்றால் அவர் நிச்சயமாக இரண்டாம் கட்ட நிலையை அடைந்துவிட்டார் எனக் கொள்ளலாமா ?


டேவிட் காட்மன் :- அனைவருடைய முன்னிலையிலும் ஒரு முறை பகவான் தன் ஆசிரமத்தில் இருந்த இலஷ்மி என்ற பசுவும் தன்னுடைய அன்னை மட்டுமே ஞானம் பெற்றவர்கள் என வெளிப்படையாக அறிவித்தார். அவர்களைப் பற்றி அப்படிக் கூறியதின் மூலம் மற்றவர்கள் அந்த நிலையை எட்டிக் கொண்டு இருக்கின்றனர் என்பதை மறைமுகமாக சுட்டிக் காட்டினார். ஆனால் அந்த இருவரும் மறைந்த பின்னர்தான் அவர்களைப் பற்றியும் பகவான் அப்படிக் கூறினார்.

ஜான் டேவிட்:- அந்த கேள்வியை இப்படிக் கேட்கின்றேன். அந்த ஆசிரமத்தில் ஒரே மாதிரியான மன நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த அனைவரும் மனதாற ஏற்றுக் கொண்ட நிலையில் ஒரு சிலர் இருந்திருக்க வேண்டும். பகவான் வெளிப்படையாக அறிவிக்காமல் இருந்தாலும் அப்படிப்பட்ட சிலர்தான் ஞானம் பெற்றவர்கள் என நினைக்கலாமா ?

டேவிட் காட்மன் :- அப்படி அனைவராலும் ஒருமித்தமாக மதிக்கப்பட்டவர்தான் முருகனார் என்பவர். அவர் நிறைய தமிழ் பாடல்களை 1920 ஆம் ஆண்டு முதலேயே இயற்றி வந்தார். 20,000 செய்யுட்களுக்கு மேல் எழுதி இருந்தார். அவற்றில் பல ஞானத்தை சுற்றி அமைந்திருந்தவையே. அவை பகவானுடைய காலத்திலேயே வெளியிடப்பட்டன, பகவானும் அதை ஆட்சேபிக்கவில்லை. அவற்றில் இருந்து பல பாடல்களை மேற்கோள் காட்டி பகவானும் பேசி இருந்ததினால் அந்த கருத்துக்கள் உண்மையானவையே என அனைவரும் நினைத்தனர்.


ஜான் டேவிட்:- அப்படி மற்ற எவரும் பகவானினால் அடையாளம் காட்டப்பட்டு இருக்கின்றனரா?

டேவிட் காட்மன் :- அவருடைய தாயாருக்கும், அந்த பசுவிற்கும் ஞானம் பெற்றவர்களை அடக்கம் செய்யும் இடத்தில் இறுதி சடங்குகள் நடைபெற்றது. அது போலவேதான் பகவானுடைய வாழ்நாளில் மற்றும் ஒருவர் அடக்கம் செய்யப்பட்டார். அதிகம் வெளி உலகிற்குத் தெரிந்திராத அவர், 1931 ஆம் ஆண்டில் மரணம் அடைந்த மோடி மஸ்தான் என்ற முகமதியர். அவரும் அப்படிப்பட்ட இடத்திலேயே அது போலவே அடக்கம் செய்யப்பட்டார். 40 கிலோ தொலைவில் இருந்த அவர் மரணம் அடைந்ததும் குஞ்சு ஸ்வாமியை பகவான் அழைத்து உடனே அந்த ஊருக்குச் சென்று அவருடைய உடல் மீது தன்னுடைய தாயாருக்கு எழுப்பப்பட்டது




ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்






*முருகனார்*



மோடி மஸ்தான்

போல ஒரு ஆலயத்தை எழுப்புமாறு கட்டளை இட்டார். அதனால் அவர் ஞானி என்று மறைமுகமான அறிவித்து இருந்ததாகவே நான் கருதுகின்றேன்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்






லஷ்மி என்ற பசு மீது எழுப்பப்பட்டுள்ள சிலை



இலஷ்மி என்ற பசுவுடன் பகவான்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்




## பாகம்-6


# நான் இப்படி செய்ய வேண்டும், அப்படி செய்ய வேண்டும் என்று அவருக்குள் என்றும் எண்ணம் வரவில்லை.

**ஜான் டேவிட்:-** இப்பொழுதெல்லாம் நிறையபேர் உலகமெங்கும் சுற்றிக் கொண்டு பிரசங்கங்கள் செய்கின்றனர். அவர்களில் சிலர் தான் பகவானுடைய வழி வந்தவர் என்றும் கூறிக் கொள்கின்றார்கள். அது குறித்து உங்கள் கருத்து என்ன ?

**டேவிட் காட்மன் :-**பகவான் எவரையும் தன்னுடைய வழித் தோன்றலாக அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. அப்படி அவர்கள் கூறிக் கொண்டு இருந்தால் அது பொய்யான தகவல். அவர்கள் வேண்டுமானால் நாங்கள் இரமண மகரிஷியின் சிஷ்யர்கள், அவர்தான் எங்கள் குரு என்று கூறிக் கொள்ளலாம். ஆகவே அவர்கள் பகவானுடைய கொள்கைகளைப் பரப்ப அதிகாரபூர்வமாக அனுமதிக்கப்பட்டவர்கள் அல்ல. போதனை செய்ய வேண்டும் எனில் அவர்களுக்கு எந்த ஞானியாவது போதித்து இருக்க வேண்டும். பகவானைப் பொறுத்த மட்டில் அவர் ஆத்மஞானம் பெற்றவர். வேறு எந்த மனிதராலும் அவருக்கு அப்படிப்பட்ட ஞானோதயத்தைத் தந்து இருக்க முடியாது.
பாப்பாஜி கூறுவது உண்டு. நீ ஒரு குருவாக வேண்டும் என்றால் அந்த பிராப்தத்தை உன் உள்ளுக்குள் உள்ள ஆத்மஞானமே தந்திருக்கும், அது வேறு இடத்தில் இருந்து வர முடியாது. பாப்பாஜி மற்றொரு முறை கூறினார் “ அருணாசலாதான் பகவான் சத்குருவாக விளங்க வேண்டும் என்பதற்காக அந்த சக்தியைக் கொடுத்திருந்தார். அதை அனேகமாக அனைவரும் ஏற்கின்றனர் ”



பாப்பாஜி என்பவர் 1910 ஆம் ஆண்டில் பஞ்சாப்பில் பிறந்தவர். இராம தீர்த்தா என்பவரின் சகோதரியின் மகன். அவருக்கு 30 வயதான பொழுது இரமண மகரிஷியை சந்தித்தவருக்கு ஆத்ம ஞானம் கிடைத்தது.1997 ஆம் ஆண்டு அவர் பூதவுடலைத் துறந்தார்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

பக்கம்- 66

அதனால் பகவானுக்கு மனிதர்கள் எவரும் போதனை செய்யவில்லை. அதே சமயத்தில் பகவான் தான் ஒரு போதகராக ஆகவேண்டும் என்றும் எண்ணி இருந்திருக்க மாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். இளமைக் காலத்தில் அவர் மூன்று முறை தன்னுடைய பக்தர்களின் பார்வையில் இருந்து தப்பி ஓடிவிட நினைத்தார், ஆனால் அருணாசலத்தின் மீதான அன்பினால் அவரால் அந்த இடத்தை விட்டு செல்ல முடியவில்லை. இமய மலையில் வேண்டுமானால் எவர் கண்களிலும் படாமல் ஒழிந்து கொண்டு இருக்க முடியும். ஆனால் அருணாசலத்தில் அப்படி ஓடி ஒழிய வாய்ப்பு இல்லை. ஏன் எனில் சிறிய மலையான அதில் எந்த இடத்தில் சென்று பதுங்கிக் கொண்டாலும் திருவண்ணாமலை மக்கள் அவரை தேடிக் கண்டு பிடித்து விடுவார்கள். தப்பி ஓடி நினைத்த அவர் மூன்றாம் முறை கண்காணாமல் சென்று விட நினைத்தும் முடியாமல் போக பகவான் “தான் மக்களுக்கு அங்கிருந்தபடி சேவை செய்ய வேண்டும் என்பது தனக்கு தரப்பட்டுள்ள விதியே” என்பதை உணர்ந்து கொண்டார்.

ஜான் டேவிட்:- இனி பகவானுடைய கதைக்கு நாம் போவோமா ? அவருடை இறுதி காலத்தில் வாழ்ந்த வாழ்கை பற்றி நிறைய கேள்விப் பட்டோம். அவருக்கு கையில் புற்று நோய் வந்தது போலவும் அதை வெளி நாட்டினர் குணப்படுத்தி இருக்க முடியும் என்றாலும் அதில் அவர் அக்கரை செலுத்தவில்லை என்றும் கூறப்பட்டவை நிஜமானதா ?

டேவிட் காட்மன்:- அவர் சிறந்த வெளி நாட்டுச் சிகிட்சை பெற்றார். நான்கு முறை அறுவை சிகிட்சை மிகவும் திறமை வாய்ந்த மருத்துவர்கள் மூலம் செய்யப்பட்டது. ஆனாலும் அந்த கட்டி மீண்டும் மீண்டும் வெளி வந்து கொண்டே இருந்தது. ஆகவே அந்த கையை வெட்டி எடுத்து விட்டால் குணமாகி விடும் என்ற நிலை தோன்றிய பொழுது அவர் அதற்கு மறுத்து




லஷ்மியின் சமாதி

விட்டார்.

அவர் அந்த மருத்துவங்களை எதிர்த்தார் என்று தவறான எண்ணம் கொள்ளக் கூடாது. அவர் கூறுவது உண்டு " இயற்கை என்ன நினைத்திருக்கின்றதோ அப்படியே நடக்கட்டும் "

அவர் அவதிப்படுவதைக் கண்ட ஆசிரமத்தினர் மருத்துவர்களை அழைத்து வந்தனர். பகவான் அவற்றை வேண்டாம் என்று கூறாததின் காரணம் மற்றவர்கள் தன் மீது அக்கரையுடன் செய்ய நினைத்ததை உதாசீனப்படுத்தக் கூடாது என்பதினால்தான். அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதம், யுனானி என்ற அனைத்து சிகிச்சைகளையும் பெற்றுக் கொண்டார். அவருக்கு அவற்றில் எந்த விருப்பமும் இல்லை. ஆனாலும் என் சரீரத்துடன் அவர்கள் எத்தனை விளையாட வேண்டுமோ - அறுத்தாலும் சரி, மாவு கட்டுதல் போன்று வேறு எது செய்தாலும் சரி -- விளையாடட்டும் என விட்டு விட்டார்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



**ஜான் டேவிட்:-** ஆக அவர் வாழ்க்கையில் முழு அளவில் வாழ்ந்து இருக்கின்றார். எது நடக்கட்டுமோ அது நடக்கட்டும் என விட்டிருந்தார்.

**டேவிட் காட்மன்:-**ஆமாம் மருத்துவர்களை விட அவருக்கு தனக்கு என்ன நடக்கப் போகின்றது என்று நன்கே தெரியும். அதனால்தான் அவர் எதற்கும் ஆட்சேபிக்கவில்லை. அவருடைய கடைசி காலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இது. ஒரு கிராமத்தில் இருந்து வந்தவர்கள் அவருக்கு மாவு கட்டு போட்டுவிட்டுச் சென்றனர். அதைக் கண்ட அலோபதி மருத்துவர்கள் தாங்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதினால் அதை எடுக்குமாறு வற்புறுத்த , வீண்வாதத்தைத் தவிர்க்க விரும்பிய பகவான் அதை தானே எடுத்து எதிரில் நின்று கொண்டிருந்த கான்சர் நோயாளியுடைய கழுத்தில் போட்டார். அவனுக்கு வியாதி குணமாயிற்று. ஆனால் பகவான் இறந்து


போனார்.

ஜான் டேவிட்:- ஒரு விதத்தில் பார்த்தால் அவர் என்ன நடக்க வேண்டுமோ அது நடக்கட்டும் என்று வாழ்ந்திருந்தபடி இயற்கையுடன் அவர் சரண் அடைந்து இருக்கின்றார்.

டேவிட் காட்மன்:- பகவானுடைய செயல் சமிஸ்கிருதத்தில் சங்கல்பம் அதாவது வேண்டும் என்றே அப்படி ஏற்றுக் கொண்ட நிலை என்று கூறுவார்களே அப்படித்தான் இருந்ததாக கூற வேண்டும். அதாவது அவர் ஒரு குறிப்பிட்ட பாதையில் செல்ல முடிவு செய்து விட்டதைக் காட்டுகின்றது. அந்த சங்கல்பம் என்ற திடமான முடிவுதான் விழிப்புணர்ச்சி பெற்றவர்கள் மற்றும் விழிப்புணர்ச்சி பெறாதவர்களுக்கிடையே இருக்கும் வித்தியாசம்.

விழிப்புணர்ச்சி பெறாதவர்கள் நிறைய சங்கல்பம் எடுத்துக் கொள்கின்றனர். அடுத்து என்ன செய்ய வேண்டும், எதை செய்தால் வெகு காலத்திய மற்றும் உடனடியாக நன்மை கிடைக்கும் என எண்ணிச் செயல்படுபவர்கள். ஆனால் ஞானி என்பவனுக்கு அப்படி எதுவும் கிடையாது. அதை செய்ய வேண்டுமா, இதை செய்ய வேண்டுமா என்ற எண்ணம் தோன்றுவதே இல்லை. நான் எழுதிய “சன்னிதானத்தின் (தோற்றம்) சக்தி ” ஒரு புத்தகத்தில் உள்ளதை இப்போது கூறுகிறேன் கேளுங்கள்:-

நாராயண ஐயர் என்பவர் பகவானுடன் நடத்திய சுவையான விவாதத்தில் இடையே ஞானிகளுடைய சக்தி எப்படிப்பட்டது என்பதை பற்றி அறிந்து கொண்டார். ஒருநாள் அவர் பகவானுடன் அமர்ந்து கொண்டு இருந்த பொழுது ஞானிகளுடைய சங்கல்பங்கள் தமது பக்தர்களுடைய விதியை மாற்ற முடியுமா ? என்று கேட்க பகவான் சிரித்தபடியே கேட்டார் “ ஞானிகளுக்கு சங்கல்பம் என்பது உண்டா என்ன ? ஜீவன் முக்தியை அடைந்தவர்களுக்கு சங்கல்பம் என்ற



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

ஒன்று தோன்றுவதே இல்லை ”


“அப்படி என்றால் என்னைப் போன்றவர்கள் உங்களைப் போன்றவர்களிடம் வந்து பிரார்த்தனை செய்து என்ன பயன் ? உங்கள் முன்பு வந்து அமர்ந்து கொள்வதே எங்களுக்கு நல்லவை நடக்க வேண்டும் என்பதற்காகத்தானே ”

பகவான் நிதானமாகக் கூறினார். “ ஞானிகள் முன்பு வந்து அமர்ந்தவுடனேயே ஒருவனுடைய கெட்ட நடத்தையினால் ஏற்பட்ட கர்மாக்களின் வலிமை குறைந்து விடும். ஞானிக்கு சங்கல்பம் இல்லை, ஆனால் சன்னதி இருக்கின்றது. அதாவது தோற்றம். அந்த தோற்றம் மிக சக்தி வாய்ந்தது. அது பல நன்மைகளைத் தரும். மன அமைதி, முக்திபோன்றவை தந்து சில நேரங்களில் காப்பாற்றும். கர்மாக்களை விலக்கும். உங்னகளுடைய பிரார்தனைக்கு வார்த்தைகளில் பதில் கிடைக்காது. ஆனால் அவை அந்த புனிதத் தோற்றம் தானாக அவற்றை கிரகித்துக் கொண்டு விடும். ஞானிகள் தம் பக்தர்களை காப்பாற்றுவார், ஆனால் காப்பாற்றுவேன் என்ற சங்கல்பம் செய்து கொண்டு செய்ய மாட்டார்.

**ஜான் டேவிட்:-** அதைத்தானே தலாய்லாமா மற்றும் புத்த மதத்தினர் கருணை என்று கூறுகின்றனர்.


**டேவிட் காட்மன்:-** புத்த மதத்தைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது என்பதினால் நான் எதுவும் கூற விரும்பவில்லை.

புண்ணியாத்மாக்கள் சங்கல்பம் எடுப்பதில்லை என்பதற்கு அர்த்தம் எந்த விதமான தனிப்பட்ட உணர்ச்சிகளுக்கும் அடிமை ஆகாத நிலையில் இருப்பது என்பதுதான். அதாவது நான் அவனுக்கு இப்படி உதவ வேண்டும், அவன் உதவி பெறத் தகுதியானவன், இல்லை இந்த நிலையை மாற்ற வேண்டும் என எண்ணுவது இல்லை. அப்படி பற்றற்று இருக்கையில்தான் ஒரு சக்தி உருவாகி வர இருக்கும் தீமைகளைத்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்





இராமசாமி பிள்ளை



கையில் கட்டுடன் பகவான் படுத்திருக்கும் காட்சி

தடுக்கின்றது.

அது எப்படி என்றால் ஒரு அலுவலகத்தில் முதலில் வரும் விண்ணப்பங்களை பரிசீலித்து உள்ளே இருக்கும் அலுவலகத்தில் உள்ளவர்களிடம் அவற்றை நிறைவேற்றி வைக்க அனுப்புவதைப் போலத்தான். உள்ளே உள்ள பூட்டப்பட்ட அறையில் ஞானி அமைதியாக பற்றற்று அமர்ந்து கொண்டு இருக்க, அவரிடம் இருந்து வெளிப்படும் சக்தி தன்னிடம் வருபவர்களுடைய் வேண்டுகோட்களை பரிசிலித்து நன்மைகளைப் கொடுக்கின்றது.


ஜான் டேவிட்:- அப்படி என்றால் அப்படிப்பட்ட புனிதமானவர்களைத் தேடி அவர்கள் முன்பாக அமர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து சரியானதா ?

டேவிட் காட்மன்:- நான் அதை ஒப்புக் கொள்கின்றேன். ஆனால் அப்படிப்பட்டவர்கள் சுலபத்தில் கிடைப்பது இல்லை. அப்படிப்பட்டவர்கள் உலகில் குறைவாகவே உள்ளனர்.


ஜான் டேவிட்:- இருபது வருடங்களாக நீங்கள் இங்கு இருப்பதினால் உங்களுடைய கருத்துக்கள் அதிகார பூர்வையானவை என எடுத்துக் கொள்ளலாமா ?

டேவிட் கார்மன்:- இருபதல்ல, இருபத்தி ஐந்து வருடங்கள்.

ஜான் டேவிட்:-இருபத்தி ஐந்து வருடங்களாக பலர் பகவானுடன் இங்கு இருந்துள்ளனர். உங்களைப் பொறுத்தவரை அனைத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்து நோக்குகின்றீர்கள். நீங்களே கூட இங்கு பயிற்சி பெற்றிருக்கின்றீர்கள். பல குருக்களிடம் பணி ஆற்றி இருக்கின்றீர்கள். ஆகவே நீங்கள் அனைத்திற்கும் சரியான விளக்கம் தரும் அதிகாரம் உள்ளவர் என நினைக்கின்றேன்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்

பக்கம்- 71

டேவிட் கார்மன்:- எனக்கு தனிப்பட்ட எண்ணங்கள் உண்டு. ஆனால் நான் என்னை மட்டுமே அனைத்தும் தெரிந்தவனாக காட்டிக் கொள்ள விரும்பவில்லை. இருபத்தி ஐந்து வருடங்களாக பலர் இங்கு இருந்துள்ளனர். அவர்கள் என் கருத்துக்கு முரண்பட்டக் கருத்துக் கொண்டவர்கள். நீங்களும் அவர்களிடம் சென்று அவர்கள் கூறுவதைக் கேட்ட பின் அவற்றையும் நம்பலாம்.

ஜான் டேவிட்:- நாம் இதுவரைப் பேசிக் கொண்டு இருந்ததைத் தவிற வேறு எதுவும் கூற விரும்புகின்றீர்களா ?

டேவிட் கார்மன்:- தனது மனதை கட்டுப்படுத்திவிட்ட ஒரு நல்ல குருவை தேடு. முடிந்தவரை அவருடனேயே இருக்க முயற்சி செய். அதுதான் எந்த ஒருவர் ஆன்மீக விழிப்புணர்வு கிடைக்க விரும்புகின்றனரோ அவர்களுக்கு நான் அளிக்கும் செய்தி.


ஜான் டேவிட்:- இந்த செய்தி சுவையானது. நாங்கள் ரிஷிகேசத்தில் ஒரு ஆசிரியரைப் பார்த்த பொழுது அவரும் இதையேதான் கூறினார். அவர் கூறினார் "நீ ஒரு குருவைத் தேட வேண்டும் "

டேவிட் கார்மன்:- தன்னால் முடிந்தது என்பதற்கும் ஒரு எல்லை இருக்கும். ஒரு குருவின் முன்னால் மௌனமாக அமர்ந்து கொள்வது என்பது , தியானம் செய்வதை விட பல மடங்கு சிறந்தது. அதனால் நான் தியானம் செய்வது தேவையற்றது என்று கூறவில்லை. தியானம் என்பது உன் மனதை நிலைப் படுத்தி ஒரு நல்ல குருவிடம் செல்ல வழி காட்டும். ஒரு குருவுடன் இருப்பது எப்படி என்றால் மலையில் ஏற முடியாமல் கஷ்டப்படுவதைப் போல இல்லாமல், ஒரு வண்டியில் அமர்ந்து கொண்டு எளிமையாக கீழ் இறங்குவதைப்

போன்றதே.

பாபாஜி அருமையான கருத்தைக் கொண்டவர். தியானம் செய்வதின் மூலம் உனக்குப் புண்ணியம் சேரும். அந்தப் புண்ணியத்தின் பலனாக ஒரு உன்னதமாக ஆன்மீகப் பிறவியின் முன்னால் சென்று அமரும் தகுதியை நீ பெறுவாய். அப்படி ஒரு நிலை வந்த பின் அந்த புனித குருவின் முன் சென்று நீ அமர்ந்து கொண்டால் மட்டும் போதும் வேறு எதுவும் செய்யத் தேவை இல்லை என்று அவர் கூறினார். அவர் முன்னால் நீ சென்று அமர்ந்தால், தான் என்ற அந்த உணர்வு வெளியேறி விடும். ஒன்றும் செய்யாமல் அவர் முன் அமர்ந்திருப்பதினாலேயே உனக்கு மேன்மை கிடைக்கும். ஒரு முறை பகவான் கூறினார் " அமைதியாக இரு, பகவான் மற்றதைப் பார்த்துக் கொள்வார் "

ஜான் டேவிட்:- நன்றி, வணக்கம்.



ஸ்ரீ இரமணரின் வாழ்க்கை வரலாறும் அவர் போதனைகளும்